Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, SEPTEMBER 02, 2024

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 03, 2024 | ஒளி: 10 கதிர் 042 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# அதிகமாக செலவிட்டால் பதவி பறிபோகும்

**பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் இணையத்தளங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், ஒரு வாக்காளருக்கு செலவிடக்கூடிய தொகையை விட அதிகமாக செலவு செய்துள்ளதாக நீதிமன்றில் கண்டறியப்பட்டால் அவர் பதவியை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த வேட்பாளரின் சிவில் உரிமைகள் மூன்று வருடங்கள் பறிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ




ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் கண்டியில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வின் போது, அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# வெளிநாட்டுக்கு படையெடுப்பு

**2024இல் 300,703 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்**

இந்த வருடத்தின் ஜூலை மாதத்தில் மாத்திரம் 28,003 பேர் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையான 07 மாத காலப்பகுதியில் வேலைக்காக வெளிநாடு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 175,163 ஆகும்.

தொடர்ச்சி P2

நாமலின் தொலைநோக்கில்

# "வரிச்சுமை குறைப்பு மீண்டும் நிவாரணம்"



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் "உங்களுக்காக வெற்றியடைந்த நாடு - நாமலின் தொலைநோக்கு" என்ற தேர்தல் விஞ்ஞாபனம் திங்கட்கிழமை (02) காலை கொழும்பில் வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2



மூன்று ஆண்டுகளுக்குள்

# "ஊழலை ஒழிப்பேன்"

**தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து நாமல் உரை**

தனது அரசாங்கத்தின் கீழ் மூன்று ஆண்டுகளுக்குள் மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் திங்கட்கிழமை (02) வெளியிட்டுவைத்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ, "டிஜிட்டல் மயமாக்கல், அரசாங்க கொள்முதல் செயல்முறைகளுக்கான போட்டி ஏலத்தை அறிமுகப்படுத்துதல் ஊடாக மோசடி மற்றும் ஊழலை ஒழிக்க முடியும்" என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கமானது, அரச சேவையை டிஜிட்டல் மயமாக்குவதுடன், தான் பதவியேற்ற முதல் ஆறு மாதங்களுக்குள் டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இது நாட்டில் உள்ள பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும், வரிசைகளின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் உதவும் என்றும் நாமல் சுட்டிக்காட்டினார்.

மேலும், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் வங்கி முறைக்குள் கொண்டுவருவதுடன், கொள்முதல் செயல்முறைகள் மற்றும் டெண்டர் நடைமுறைகளுக்குப் போட்டி ஏல நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த நடவடிக்கைகளின் ஊடாக மூன்று ஆண்டுகளுக்குள் மோசடி மற்றும் ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவேன் என்றும் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்தார்.



# டெங்கு அபாயம் மீண்டும் அதிகரிப்பு

**பாடசாலைகள், மதஸ்தலங்கள் மற்றும் அலுவலகங்களில் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் அமுல்**

நாட்டில் டெங்கு அபாயம் அதிகம் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளில் திங்கட்கிழமை (02) முதல் மூன்று நாட்களுக்கு விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



இலங்கையர்களுக்கான

# "தீர்வு எம்மிடம் உள்ளது"

**முதலீடுகள் பற்றிய முறைசார்ந்த திட்டமொன்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தயாரிக்கும்**

வெளிநாட்டில் பணியாற்றுகின்ற இலங்கையர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தமது ஆட்சியின் கீழ் தீர்வு வழங்கப்படும் என, தேசிய மக்கள் சக்தியின் தலைவர், ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுக்கான வேலைத்திட்ட வெளியீட்டு நிகழ்வு ஸ்ரீ ஜயவர்தனபுரவில் உள்ள ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்ற போது, அங்கு உரையாற்றுகையில் அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# தமிழ் பொது வேட்பாளர் மன்னார் ஆயரிடம் ஆசி

எஸ்.ஆர்.லெம்பேட்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசார கூட்டம் மன்னாரின் பல பாகங்களிலும் முன்னெடுக்கவுள்ள நிலையில் இன்றைய தினம் திங்கட்கிழமை (02) மதியம் மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த தமிழ் பொது வேட்பாளர்



பா.அரியநேத்திரன் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட

தொடர்ச்சி P2



# நினைவுச் சின்னம் வழங்கி வைப்பு

சணச வேலைத் திட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட, ஓய்வுபெற்ற முதியோருக்கான காப்புறுதி ஓய்வூதிய முறைமை தொடர்பில் கொழும்பில் திங்கட்கிழமை (02) நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஏற்பாட்டுக் குழுவினரால் நினைவுப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

# மைத்திரிக்கு எதிராக மனு 27ஆம் திகதி விசாரணை

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு மனு எதிர்வரும் 27ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் குறித்த



மனு திங்கட்கிழமை(02) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

# "3 சந்தர்ப்பங்களிலும் ரணில் கைவிடவில்லை"

போராட்டத்தின் மூலம் வன்முறையை உருவாக்கிய ஒரு தலைவரால் இந்த நாட்டைப் பொறுப்பேற்க முடியாது என தெரிவித்துள்ள நகர அபிவிருத்தி மற்றும்



வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அப்படியொரு தலைவரை நியமித்தால் இந்த நாடு பங்களாதேஷை

தொடர்ச்சி P2

# "மோசடியாளர்களிடம் சிக்க வேண்டாம்"

தம்மை பொதுச் சுகாதார பரிசோதகர்களாகக் காட்டிக்கொண்டு பணம் பறிக்கும் மோசடியில் ஈடுபடும் நபர்களிடம் சிக்க வேண்டாம் என, வர்த்தகர்களிடம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

# "மீண்டும் கம்உதாவ யுகம் வரும்"

தான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது வடகிழக்கு உள்ளிட்ட பல மாகாணங்களில் கம் உதாவ திட்டத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக பெருந்தொகையான வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தோம். கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த உடனே இந்த வீடமைப்பு திட்டச் செயற்பாடுகளை



நிறுத்தினார். எனவே, தான் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி

தொடர்ச்சி P2

# "ரணிலின் சில்லறை சொகுசுகளால் தீராது"

அதிகாரப்பகிர்வு, சமூகங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆட்சியைக் கைப்பற்றிய அடுத்த கணமே வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “தீர்வு எம்மிடம்...

அங்கு அவர் உரையாற்றுகையில், “வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்கத்துடனே மிக அதிகமானோர் வெளிநாட்டுத் தொழில்களுக்குச் செல்கிறார்கள். ஒரு சிலர் தமது வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்காகவும், சிறந்த தொழிலை மேற்கொள்வதற்காகவும், தமது பிள்ளைகளின் சிறப்பான கல்விக்காகவும் வெளிநாடு செல்கிறார்கள்.

எனினும், பெரும்பான்மையோர் நாட்டுக்குள்ளே தொழில் வாய்ப்பு கிடைக்காமையால் வருமானத்தை ஈட்டுவதற்காக வெளிநாடு செல்கிறார்கள். தொழில்களுக்காக வெளிநாடு செல்பவர்களின் மூன்று பிரதான நோக்கங்கள் இருக்கின்றன. முதலாவது வீடொன்றை அமைத்துக்கொள்வது இரண்டாவது வாகனமொன்றைக் கொள்வனவு செய்வது மூன்றாவது பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவது.

குறிப்பாக மத்தியக் கிழக்கு நாடுகளில் குவைத், கட்டார், அபுதாபி போன்ற நாடுகளில் வீட்டுப்பணிப்பெண்களாக அல்லது உழைப்பாளிகளாகப் போகின்றவர்களின் பிரதான நோக்கங்கள் அவ்வாறானதாக அமைந்துள்ளன.

ஆனால் பெரும்பாலானவர்களின் வீடொன்றை அமைத்துக்கொள்ளும் எதிர்பார்ப்பு ஈடேறவில்லை. தொலைதூர கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் அரைகுறையாக அமைத்த வீடுகள், பகுதியளவில் கூரை வேயப்பட்ட வீடுகள், பகுதியளவில் சுவர் எழுப்பப்பட்ட வீடுகள் இருக்கின்றன.

குடும்பத்தைப் பிரிந்து வெளிநாடு செல்பவர்கள் திரும்பி வந்து வீட்டைக் கூட அமைத்துக் கொள்வதில் வெற்றி பெறவில்லை. எனவே அவர்களுடைய கனவினை நிறைவேற்றிக்கொள்வதற்கான சலுகைக் கடன் திட்டமொன்றையும் அதனை மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டத்தையும் நாங்கள் அமுலாக்குவோம்.

தாய்மார்கள் வெளிநாடு செல்லும்போது பெரும்பாலும் பாட்டியிடமே பிள்ளையை ஒப்படைத்து விட்டுப் போகிறார்கள். பாட்டி வேறொரு தலைமுறையைச் சேர்ந்தவர். புதிய தலைமுறையின் கருத்துக்கள், நடத்தைப்போக்குகள் புரிந்துணர்வு இவர்களுக்கு கிடையாது.

தகப்பன் நாசமாகி வேறொரு பக்கம் போய்விடுகிறார். எனவே பிள்ளையின் கல்வியும் வெற்றியடையவில்லை. பாடசாலை செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் அமுலாக்குவோம்.

ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் வெளிநாடுகளில் வேலை செய்து விட்டு இலங்கைக்குத் திரும்பி வருபவர்கள் குறுகிய காலத்தில் கொண்டு வந்த எல்லா பணத்தையும் செலவழித்துவிட்டு. மீண்டும் வெளிநாடு செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கையில் பணம் இருந்தாலும் அதனை எவ்வாறு பயனுள்ள வகையில் முதலீடு செய்யவேண்டுமென்ற வழிகாட்டல் அவர்களுக்கு கிடையாது. நாட்டிலே விளைச்சல் குறைந்த சிறிய தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. அவற்றை இந்த இளைஞர்களுக்குப் பெற்றுக்கொடுத்தால் பயிர் செய்வதற்கான நிலம் இருக்கிறது பணம் இருக்கிறது. எனவே அதனை விருத்தி செய்து தன்னுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம்.

எனவே, பணத்தைத் தேடி மீண்டும் நாட்டை விட்டு வெளியே செல்லாமல் கொண்டு வந்த பணத்தை இந்த நாட்டிலே முதலீடு செய்து தனது வாழ்க்கையை வளர்த்துக்கொள்ளத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்த முதலீடுகள் பற்றிய முறைசார்ந்த திட்டமொன்றைத் தயாரிக்கும்” என்றார்.

# “வரிச்சுமை குறைப்பு மீண்டும் நிவாரணம்”

50 பக்கங்களைக் கொண்ட இந்த விஞ்ஞாபனத்தில் வரிச் சுமை குறைப்பு, நிவாரணம், புதிய வேலை வாய்ப்புகள் உள்ளிட்ட அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அனைத்து மக்களுக்கும் விதிக்கப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் உழைக்கும் போது, செலுத்தப்படும் வரி என்பன படிப்படியாகத் திருத்தப்படும்.

இதனால், குறைவடையும் அரச வருமானத்தை ஈட்டுவதற்கான சுங்கம், வருமான வரி மற்றும் கலால் துறைகளில் உள்ள குறைபாடுகள் உடனடியாக சரிசெய்யப்படும்.

நிலையான வருமானம் இல்லாமல் தினசரி குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு மூன்று வேளை உணவுக்கு போதுமான மானியத் தொகையைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச சந்தையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் காணப்படும் தொழில்களுக்கு செல்ல தேவையான அறிவையும் பயிற்சியையும் இளைஞர்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்தையும் உள்ளடக்கும் வகையில் தகவல் தொழில்நுட்ப வலயங்கள் நிறுவப்படும்.

அத்துடன், அதற்கு அத்தியாவசியமான இணையதள வசதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் உடனடியாக திருத்தப்படும்.

அந்நியச் செலாவணியைப் பெறச் சிறப்பு முதலீட்டு வசதிகள் வழங்கப்படுவதுடன், அதற்காக 250,000 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் முதலீடுகளைக் கொண்டு வரும் முதலீட்டாளர்களுக்கு விசேட விசா முறை அறிமுகப்படுத்தப்படும்.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாத அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிப்பதற்காக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் விசேட சுற்றுலா ஊக்குவிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

சுகாதாரம், கட்டுமானம், கல்வி மற்றும் பயிற்சி, மென்பொருள் பொறியியல், தரவு பகுப்பாய்வு, இணையப் பாதுகாப்பு, இணைய வணிகம், தயாரிப்பு வடிவமைப்பு, டிஜிட்டல் மார்க்கெட்டிங் போன்ற அடுத்த பத்தாண்டுகளில் அதிக தேவை உள்ள துறைகளில் வேலைகளை உருவாக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

அத்துடன், நாட்டிலுள்ள அனைத்து இராணுவ, பொலிஸ் நிலையங்களும் நவீனமயப்படுத்தப்பட்டு விடுதி வசதிகள் மேம்படுத்தப்படுவதுடன், முப்படைகளின் தலைமையகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்படும்.

ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்ற ரீதியில் 10,000 புதிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அத்துடன், மேற்கூறிய வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக, இளைஞர் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற சமூகத்தை மரியாதையுடன் ஆதரிக்க ஒரு ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

அரச சேவையில் பணிபுரியும் ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் தற்போதுள்ள சம்பள நிலைக்கு ஏற்றவாறு அதிகரிக்கப்படுவதுடன், அவர்களின் நிலையான வைப்புகளுக்குச் சந்தையில் காணப்படும் சராசரி வட்டியை விட அதிக வட்டி வழங்கப்படும்.

உள்ளிட்ட பல விடயங்கள் நாமல் ராஜபக்‌ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# அதிகமாக செலவிட்டால் பதவி பறிபோகும்

2023ஆம் ஆண்டு வர்த்தமானி இலக்கம் 03 ஊடாக இது தொடர்பான விவரம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், 1947ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தேர்தலின் போதும், 31 நாட்களுக்குள் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான அறிக்கைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அதனை வழங்காமை மற்றும் தவறான தகவல்களை வழங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அவ்வாறானவர்களின் பதவி மற்றும் குடியுரிமை பறிக்கப்பட்ட சம்பவங்கள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டு புதிய சட்டத்தின் மூலம் இது சட்டமாகிவிட்டதால், தேர்தல் முடிந்த 21 நாட்களுக்குள் வேட்பாளர்கள் தங்களது வருமானம் மற்றும் செலவு விபரங்களை தேர்தல் ஆணைக்குழுவிடம் அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இது தொடர்பான விவரங்கள் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் இணையத்தளங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்படி, செலவின விவரங்கள் முரண்பாடாகவோ அல்லது தவறான தகவல்களாகவோ இருந்தால், எந்நேரத்திலும் அதற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்து நீதிமன்றில் நடவடிக்கை எடுக்கச் சட்டத்தின் மூலம் மக்களுக்கு அனுமதியுள்ளதாக ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

# மைத்திரிக்கு எதிராக மனு 27ஆம் திகதி விசாரணை

அப்போது, மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தனது கட்சிக்காரர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகக் கடமையாற்றுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்ததையடுத்து அவர் கட்சியின் தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி அவர் தொடர்ந்தும் தலைவராகச் செயற்படவில்லை எனவும் நீதிமன்ற உத்தரவை மீறி அவதூறு செய்யவில்லை எனவும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். அப்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாந்த ஜெயவர்தன, இது தொடர்பான உண்மைகளை உறுதிப்படுத்துவதற்காகத் திகதியொன்றைத் தருமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

> **இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர், கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி, மைத்திரிபாலவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு என கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது**

அதன்படி, குறித்த மனுவை இம்மாதம் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மனுவானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மான்டேக் சரத்சந்திரவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்ததாக மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார்.

இவ்வாறான இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர், கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி, மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு என கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு அபாயம் மீண்டும் அதிகரிப்பு

இதன்படி, கண்டி, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அதிக டெங்கு ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காணப்படும் பாடசாலைகள், மதஸ்தலங்கள் மற்றும் அலுவலகங்களில் இந்த விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் டெங்கு பரவும் அபாயம் காணப்படுவதாகவும், எனவே இராணுவம், சுற்றாடல் பொலிஸ் பிரிவு மற்றும் சுகாதார குழுக்கள் இணைந்து இந்த விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

> **தற்போது நிலவும் சீரற்ற காலநிலையுடன் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும், இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது**

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் பதினேழு (17) டெங்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளதுடன், 30 ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டு டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இம்மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மூவாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழு டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் இது கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பாகும்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையுடன் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும், இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.

# “மோசடியாளர்களிடம்...

அண்மைய காலமாக தம்மை பொதுச் சுகாதார பரிசோதகர்களாகக் காட்டிக்கொண்டு, வியாபாரிகளுக்குச் சலுகைகளை வழங்க அல்லது வழக்குத் தாக்கல் செய்யாமல் இருக்க என தெரிவித்து பணம் கோரும் மோசடிகள் தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண நேற்று (02) தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் வியாபார நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தொலைபேசி ஊடாக அழைத்து, தம்மை பொதுச் சுகாதார பரிசோதகராக அல்லது பொலிஸாராக காட்டிக் கொண்டு பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் சில மோசடியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவ்வாறான அழைப்புகள் கிடைத்தால் அது தொடர்பில் தமது பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எந்தவொரு காரணத்துக்காகவும், எந்தவொரு பொதுச் சுகாதார பரிசோதகருக்கும் யாரும் பணம் செலுத்தத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோசடியாளர்கள் வங்கி கணக்கு இலக்கத்தை வழங்கி அதில் பணத்தை வைப்பிலிடுமாறு கோருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# “3 சந்தர்ப்பங்களிலும்...

விட மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்று கூறினார்.

கம்பஹா மாவட்டத்தின் தொம்பே தேர்தல் தொகுதியில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவின் பிரசார கூட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை(01) உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கூறியதாவது, “இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 39 வேட்பாளர்களில் ஏழு முன்னாள் அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர். அவர்கள் யாரும் அந்த சவாலை ஏற்கவில்லை. அந்த சவாலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டுமே ஏற்றுக்கொண்டார்.

ரணசிங்க பிரேமதாச காலமான போது நாட்டு மக்களுக்காகப் பிரதமர் பதவியை ரணில் ஏற்றார். 1999 இல் இந்த நாடு எதிர்மறையான பொருளாதாரத்திற்குச் சென்ற போது, அவர் இந்த நாட்டை பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தப் பாடுபட்டார். மேலும், 2022 இல், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில், எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக வரிசைகள் இருந்தன. எங்களிடம் தேவையான மருந்து இருக்கவில்லை. அப்போது இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று கூறி பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்த 3 சந்தர்ப்பங்களிலும் அவர் இந்நாட்டு மக்களுக்கு நியாயத்தை வழங்கினார். ரணில், சவால்களை வெற்றிகொள்ளும் ஒரு தலைவராக தம்மை நிரூபித்துக் கொண்டு இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார். எமது அரசாங்கத்தில் விவசாய அமைச்சராக அனுரகுமார திஸாநாயக்க மிகவும் தோல்வியடைந்த அமைச்சராக வரலாற்றில் இடம்பிடித்தார். 88/89 காலத்தில் வீடுகளில் தங்கப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அடையாள அட்டைகள் எடுக்கப்பட்டன. 2022 அரகலயின் போது வீடுகளுக்குச் சென்று அநுரகுமாரவின் ஹெல்மெட் கும்பல் பெறுமதியான பொருட்களை எடுத்துச் சென்றது. அத்தகைய தலைவரால் இந்த நாட்டைப் பொறுப்பேற்க முடியாது என்றார்.

# “ரணிலின் சில்லறை...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்,

“சிறுபான்மைச் சமூகங்களின் அமோக ஆதரவுடன் சஜித் பிரேமதாசவை வெல்லவைக்க வேண்டும். மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள சகல சமூகங்களதும் தெரிவாக சஜித் பிரேமதாச இருப்பார்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் நாளாந்த தொழிலாளர்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அயல் நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களால் அதிகம் பாதிக்கப்படுவது மன்னார் மாவட்டமே. இது குறித்து, எமது வேட்பாளர் சஜித்திடம் விளக்கியுள்ளோம். அவரது ஆட்சியில் இதற்கு தீர்வு கிடைக்கும்.

ஆறு தடவைகள் பிரதமராக இருந்தவர் ரணில் விக்ரமசிங்க. எமது மக்களின் பிரச்சினைகள் எவற்றையும் அவர் தீர்க்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளைத் தந்திரமாக இழுத்தடித்தார்.

சமூகப் பிரச்சினைகளைச் சில்லறைக்காசுச் சொகுசுகளால் தீர்க்கவே முடியாது. வாக்குகளில்லாத சிலர் அவரவர் வாய்ப்புகளுக்காகவே ரணிலை ஆதரிக்கின்றனர். விரட்டியடிக்கப்பட்ட கோட்டாவின் எஞ்சிய கால ஆட்சியை, எச்சில் ஆசைகளுக்காகப் பயன்படுத்துவோரை ஆட்சியிலிருந்து விரட்டுவோம்.

பரந்தும் விரிந்தும் கிடக்கும் வடமாகாண பூமியில், சுற்றுலாத் தளங்களை உருவாக்கி, வாழ்வாதாரத்தைப் பலப்படுத்த சஜித் பிரேமதாசவைப் பலப்படுத்துங்கள்” என்று குறிப்பிட்டார்.

# “மீண்டும் கம்உதாவ...

செயல்படுத்துவதோடு, வீடில்லாதவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து வீட்டுப் பிரச்சினை உள்ளவர்களின் அந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி முஸ்லிம் கிராமத்தில் திங்கட்கிழமை (01) மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கம்உதாவ வேலைத்திட்டத்தின் மூலமே பரந்தளவில் வீடமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டது. ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி அவர்கள் 10 இலட்சம் வீடுகளையும் 15 இலட்சம் வீட்டு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கின்ற போது அரசாங்கத்தின் வருமானம் உயர்ந்து காணப்பட்டது. அந்த காலத்தில் தேசிய உற்பத்தி 21% காணப்பட்டிருந்தது. தற்பொழுது அது பத்து வீதமாகக் குறைந்து இருக்கின்றது.

எனவே இந்த வேலைத்திட்டங்களை அரசாங்கத்தின் நிதியினூடாக மாத்திரம் முன்னெடுக்க முடியாது. எனவே புதிய வழிமுறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இது இலகுவான காரியம் அல்ல. ஆனாலும் அந்த சவாலை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இந்த நாட்டில் வீடமைப்பு வேலைத் திட்டத்தைத் தான் அதிகாரத்திற்கு வந்த உடனே ஆரம்பிப்பேன். உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்டு மீண்டும் ஒருமுறை கம்உதாவ யுகத்தை உருவாக்குவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# தமிழ் பொது வேட்பாளர்...

ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து ஆசி பெற்றார். - மன்னாரிற்கு வருகை தந்த தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அத்துடன், மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் ஆசி பெற்றார். இதன் போது அருட்தந்தை நேரு அடிகளாரும் கலந்துகொண்டிருந்தார்.

# வெளிநாட்டுக்கு...

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளதுடன், குறித்த 07 மாத காலப்பகுதியில் அவர்களிடம் இருந்து 3,710.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக மத்திய வங்கி கூறியுள்ளது.

இந்த அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் 1,71,864 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக சென்றுள்ளதுடன், அந்த காலகட்டத்தில் 3,363.6 மில்லியன் டொலர்கள் நாட்டுக்கு கிடைத்துள்ளன.

இந்த நிலையில், இலங்கை வரலாற்றில் அதிகளவானோர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்ற ஆண்டாக 2014ஆம் ஆண்டு பதிவாகியுள்ளதுடன், உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, அந்த ஆண்டில் 300,703 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக நாட்டை விட்டு வெளியேறி உள்ளமை குறிப்பிடத்தக்கது.











## தேசிய தின நிகழ்வு...

மலேசியாவின் 67ஆவது தேசிய தின நிகழ்வானது கொழும்பு The Galle Face Hotel சனிக்கிழமை (31) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூர் உட்பட உயர்ஸ்தானிகர்கள், உயரதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள்,அரசியல் பிரமுகர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

- எம்.எப்.றிபாஸ்

### சுமந்திரன், சாணக்கியனின்

# “துணிச்சலான முடிவு”

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிப் படியில் முன்னிலையில் உள்ள வேட்பாளரான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானம் எடுத்துள்ள தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோரின் துணிச்சலான முடிவும் தீர்க்க தரிசனமும் வரவேற்கத்தக்கது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகம்பரம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், நாடு மாத்திரம் அல்லாமல் சிறுபான்மை மக்களும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ள நேரத்தில் இன்னும் சில தினங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. பிரதான வேட்பாளர்களில் சஜித் பிரேமதாசதான் முன்னிலையில் இருக்கின்றார். தமிழ் முஸ்லிம் மக்களதும் மலையக மக்களதும் பெரும்பான்மை ஆதரவு சஜித்துக்கே கிடைத்து வருகின்றது. வேட்பாளர்களின் கள நிலைவரத்தைப் பொறுமையாகவும் உன்னிப்பாகவும் அவதானித்து தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை மக்களின் நலன் கருதி தீர்க்கமான முடிவை எடுத்துள்ளமை பாராட்டத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளரை ஆதரித்து அவருக்கு வாக்களிப்பதன் ஊடாகவே வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடியதாகப் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்ற தீர்க்க தரிசனம் மிகுந்த செயற்பாடு அவர்களின் அரசியல் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.



## பேருந்துடன் மோதிய முச்சக்கர வண்டி

மட்டக்களப்பில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் மோதி பாரிய விபத்துச் சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (01) மாலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு-களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் ஓந்தாச்சிமடத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் பலத்த காயங்களுக்குட்பட்ட நிலையில், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தில் முச்சக்கர வண்டி நொறுங்கியுள்ளதுடன், பேருந்தின் முன்பகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மாமியாரின் மிளகை திருடிய மருமகன் கைது

தன்னிடம் இருந்த மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான மிளகு திருடப்பட்டுள்ளதாக பதுளை-பதனவத்த, புதுகேகந்த கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், தனது மருமகனுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பெண், வீட்டுக்கு அருகில் உள்ள கட்டிடமொன்றில் தனது மருமகனின் உதவியுடன் மிளகு சேமித்து வைத்துள்ளதாகவும் வீட்டில் பாதுகாப்பு சி.சி.ரி.வி. கெமராக்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் மிளகு பதுக்கி வைக்கப்பட்டிருந்த கட்டிடப் பகுதி கெமராவில் பதிவாகாது எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது முறைப்பாடு பதிவு செய்த பெண்ணுடன் வந்த அவரது மருமகன் மீது எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில் அவரை கைது செய்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் திருடப்பட்ட ஒரு தொகை மிளகு மீட்கப்பட்டதாகத் தெரிவித்த பதுளை பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## கூட்டங்களை குறைத்தார் ரணில்


ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களை திடீரென குறைத்துள்ளார்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தயார் செய்திருந்த முப்பது பிரசார கூட்டங்கள் குறைக்கப்பட்டுள்ளது.









## 39ஆவது ஆண்டு நினைவஞ்சலி

■ பு.கஜிந்தன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் அவர்களின் 39ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் வலிதெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம் தலைமையில் திங்கட்கிழமை (02) அனுஷ்டிக்கப்பட்டது.

இதில், வி.தர்மலிங்கம் அவர்களின் மகனும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடமாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




## ஆபத்தான கடலில் நீந்திய மூவர் தப்பினர்

கல்கிசை கடற்கரையில் நீராடிக்கொண்டிருந்த 16 வயதுடைய மூன்று பாடசாலை மாணவர்கள் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், உடனடியாக செயல்பட்ட கல்கிசை உயிர் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டதாக கல்கிசை தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட மூன்று மாணவர்களும் அடிப்படை சிகிச்சையின் பின்னர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் போர்வையில் வந்த மூன்று மாணவர்களும் “இந்த இடத்தில் நீந்துவது ஆபத்தானது” என்று காட்சிப் படுத்தப்பட்டிருந்த போதிலும் நீராடச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த மூவரும் இவ்வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள, கொழும்பு பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்திரகுமார் சஜித்துக்கு ஆதரவு

கிளிநொச்சியின் முன்னாள் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துக் கட்சியின் பொதுச் செயலாளருமான முருகேசு சந்திரகுமார், 2024 ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் இடையே சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை (02) இடம்பெற்ற விசேட சந்திப்பையடுத்து இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் இந்த அறிவிப்பை



விடுத்தார். 1994-2000 மற்றும் 2010-2015 காலகட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ள இவர், தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து, பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் பிரதித் தலைவராகவும் பணியாற்றி அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியுமாவார். 2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகி சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

## குளவி கொட்டுக்கு இலக்கான வெளிக்கள உத்தியோகத்தர்

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா-மவுஸ்ஸாக்கலை தோட்ட சீர்பாத பகுதியில் பணிபுரிந்த வெளிக்கள உத்தியோகத்தரான 46 வயதுடைய எஸ்.தினேஸ் குளவி கொட்டுக்கு இலக்காகிய சம்பவம் திங்கட்கிழமை (2) இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் வேலைக்குச் சென்று திரும்பும் போது, அப்பகுதியில் உள்ள மரம் ஒன்றில் கட்டியிருந்த குளவி கூட்டை பறவை மோதி சென்றதால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது.



அவர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தோட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# எட்டுத் திக்கிலும் பறக்கும் தேர்தல் கால வாக்குறுதிகள்

தேர்தல் என்று வந்துவிட்டாலே ஒவ்வொரு கட்சிகளும் தமது தேர்தல் விஞ்ஞானபத்தை வெளியிடுவது வழமை. அதில் பல வாக்குறுதிகளும் அடங்கியிருக்கும். தேர்தல் முடிந்து, ஆட்சிபீடமேறிய பின்னர் அந்த வாக்குறுதிகளில் பல அந்த ஆவணத்தினுள்ளேயே அடங்கிவிடுவது வழமை.

நடைமுறைச் சாத்தியமற்ற பல வாக்குறுதிகள் இவ்வாறு வழங்கி, மக்களைத் தவறான வழியில் திசை திருப்பும் முயற்சிகள் இந்த தேர்தல் விஞ்ஞாபனங்களில் காண முடியும். இவற்றை மக்களும் நம்பிவிடுவது வழமை.

இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அவ்வாறான பல வாக்குறுதிகளை அரசியல் கட்சிகள் வெளியிட்டுள்ளன. குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட பொருளாதார மீட்சி தொடர்பான ஒப்பந்தத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோர் பல்வேறான கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி சார்பாக வெளியிடப்பட்டுள்ள விஞ்ஞாபனத்தில் அவ்வாறான மாற்றங்கள் பெரிதும் குறிப்பிடப்படாத போதிலும், வருமான வரி திருத்தம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனத்தில் இந்த உடன்படிக்கையை அடிப்படையிலிருந்து மாற்றுவது தொடர்பான கருத்தொன்றை அவதானிக்க முடிந்தது. இது எந்தளவுக்குச் சாத்தியமானது என்பது கேள்விக்குறியே. ஏனெனில், இந்தத் திட்டம் ஏற்கனவே நடைமுறையிலுள்ளது. நடைமுறைப்படுத்தும் அம்சங்களில் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்தலாமே தவிர, ஒப்பந்தத்தில் அடிப்படையிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச பொறுப்பு வாய்ந்த அமைப்பு உடன்படாது. இந்நிலையில், இந்த வாக்குறுதி மக்களைத் தவறான திசையில் வழிநடத்தும் விடயமாக அமைந்துள்ளது.

அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்குவது என்பது தொடர்பில் சகல கட்சிகளும் தமது விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளன. ஆனாலும், அந்த அதிகரிப்பை வழங்குவதற்கு எந்த வழியில் அரசாங்கம் நிதியைத் திரட்டிக் கொள்ளும் என்பது தொடர்பான தெளிவான விளக்கம் வழங்கப்படவில்லை.

நாட்டிற்கு வருமானம் கிடைக்கும் வழி மூலங்கள் பற்றிய தெளிவுபடுத்தல்கள் எதுவும் எந்தவொரு கட்சியினதும் விஞ்ஞாபனத்திலும் காணக் கிடைக்கவில்லை. மாறாக, நிவாரணங்கள் வழங்குவது தொடர்பான விடயங்கள் அதிகளவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களிலும் இவ்வாறான தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, நாடு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தது. இனிவரும் தலைவர்களும் அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வார்களாயின், இந்நாடு மேலும் உறுதியற்ற நிலைக்கு நகர்வதைத் தவிர்க்க முடியாது.

சர்வதேச முதலீடுகளைக் கவர்வதற்கு, நாட்டினுள் வெளிநாட்டவர்களுக்கு வியாபாரம் செய்வதற்கு உகந்த சூழலை ஏற்படுத்துவது, வெளிநாட்டு முதலீடுகளுக்கான தளர்ந்த வரிக் கொள்கை போன்ற முக்கியமான அம்சங்கள் எதனையும் பிரதான விஞ்ஞாபனங்களில் காண முடியவில்லை. வழமை போன்று தேர்தல் காலங்களில் மக்களுக்கு நிவாரணங்களை வாரி வழங்கும் அறிக்கைகளாக இவை அமைந்துள்ளமை வருத்தமளிக்கின்றது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


### மேடைப் பிரசாரங்கள்

# கேலிக்கூத்தாக கூடாது

மொஹமட் பாதுஷா

பொதுத் தளத்தில் பிரசாரம் செய்வது என்பது ஒரு கலையாகும் . இதன் தரத்தைப் பொறுத்தே அரசியல் பெருவெளியில் வெற்றியும் தோல்வியும் பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகின்றன. கருத்துக் கணிப்புக்கள், மிகைப்படுத்தப்பட்ட பிரசாரங்கள், அறிக்கைகள், பிரதி விளம்பரப்படுத்தல்களை விட, காத்திரமான பிரசார முன்னெடுப்பின் பங்கு அரசியல் வெற்றிக்கு அவசியமானது.

ஒருவேளை, இந்த ஜனாதிபதித் தேர்தல் 2022ஆம் ஆண்டு நடைபெற்றிருந்தால் தற்போதைய கள நிலைமைகள் வேறு மாதிரியானவையாக அமைந்திருக்கும். ஏனென்றால், மக்கள் முற்றுமுழுதாகவே ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து இருந்த காலமாக அது இருந்தது. அப்போது இருந்தநிலைகள் இப்போது இல்லை.

ராஜபக்ஷக்கள், ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச பற்றி நாட்டு மக்களிடையே கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்திலிருந்த அபிப்பிராயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, பிரசாரங்கள் ஊடாகவே மக்களைக் கவரவேண்டியிருக்கின்றது. இந்தத் தேவை எல்லோருக்கும் தற்போதுள்ளது.

இன்னும் 18 நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பல கருத்துக் கணிப்புக்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அநேக கருத்துக் கணிப்புக்கள் ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினரிடமிருந்து மாதிரிகளை எடுத்தே தயாரிக்கப்படுகின்றன. அத்துடன், தமக்கு விரும்பிய முடிவை எதிர்பார்த்து மறைமுக நிகழ்ச்சி நிரல்களுடன் முன்னெடுக்கப்படும் ஆய்வுகளும் உள்ளன.

இந்தப் பின்னணியில் கள நிலைமகள் நாளுக்குநாள் மாற்றமடைந்து வருகின்றன என்பதுதான் உண்மையாகும். எது எவ்வாறிருப்பினும், எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெறக்கூடிய அளவிலான நிலைமைகள் இன்னும் உருவாகவில்லை. இனியும் ஏற்படுமா என்பது சந்தேகமே.

எனவே, தேர்தல் விஞ்ஞாபனங்கள், பத்திரிகை விளம்பரங்கள், ஊடக அறிக்கைகள் மற்றும் மேடைப் பேச்சுக்கள் உள்ளிட்ட பிரசார முன்னெடுப்புக்களின் ஊடாகவே மக்களை, அதுவும் குறிப்பாக இதுவரை முடிவெடுக்காமல் இருக்கின்ற தளம்பல் நிலை வாக்காளர்களை தம் பக்கம் இழுக்க வேண்டிய நிலை இருக்கின்றது.

காத்திரமான உரைகள், பேச்சுக்கள், கருத்தியல் தாக்கங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் மனங்களில் குறிப்பாக இளையோர் மனங்களில் மாறுதல்களை உண்டுபண்ண முடியும் என்பதற்கு அனுரகுமார திசாநாயக்க ஒரு நல்ல உதாரணமாகக் கொள்ளப்படலாம்.

இந்தத் தேர்தலில் அனுரகுமாராவுக்கு ஆதரவு அதிகரித்துள்ளதாகப் பரவலான கூறப்படுகின்றது. அவர் வெற்றி பெறுவார் என்பது அதன் அர்த்தமல்ல. எனினும், ஜே.வி.பி. பற்றிய பழைய சம்பவங்களை எல்லாம் ஒரு புறம் வைத்து விட்டு, மக்கள் இவ்வாறு கவரப்படுவதற்கு அவரது நேர்த்தியானதும் தொடர்ச்சியானது மன உரைகளே காரணம் எனலாம்.

அனுரகுமரா இதற்கு முன்னர் பெரிய பதவிகளில் இருந்து செய்து காட்டியவர். என்று கூற முடியாது. ஜே.வி.பி இந்த நாட்டை ஆண்ட கட்சியுமல்ல. அப்படியிருந்தும் கணிசமான ஆதரவு ஏற்பட்டுள்ளது என்றால், அதற்கு முழுமையான காரணம் கட்டமைக்கப்பட்ட பிரசார முன்னெடுப்புக்கள் என்றே கூற வேண்டும்.

இதேவேளை, பாராளுமன்றத்திலும் தேர்தல் மேடைகளிலும் காத்திரமான முறையில் பேசத் தெரியாத காரணத்தால் மக்கள் மனங்களிலிருந்து மெல்லமெல்ல அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் பலரும் உள்ளனர் என்பதை, கூர்ந்து நோக்குவோரால், அடையாளம் கண்டுகொள்ள முடியும். எனவே, பிரசாரம் என்பது முக்கியமானது.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது செயலாற்றுகையின் முன்னேற்றம் பற்றிக் கூறுவதற்கு அவசியமில்லை. கடந்த இரண்டு வருடங்களுக்குள் அவர் சில விடயங்களைச் செயலில் காண்பித்திருக்கின்றார்.

அவர் பற்றி முன்னர் இருந்த எதிர்மறையான பிம்பத்தை இந்த இரண்டு வருடங்களிலும் மாற்றியமைத்திருக்கின்றார். எவ்வாறிருப்பினும், அவரைச் சார்ந்திருப்பவர்கள் பிரசாரங்களைக் கனகச்சிதமாக முன்னெடுக்க வேண்டிய அவசியம் இப்போதும் உள்ளது.

இருப்பினும். கட்சி தாவி வந்த பலர் ரணில் பக்கம் உள்ளனர். குறிப்பாக மொட்டு அணியின் முட்டுக்கள் பலர் இந்தப் பக்கம் வந்துள்ளதால், அவர்களால் பகிரங்கமாகப் பிரசாரம் செய்யமுடியாத நிலையுள்ளதாகத் தெரிகின்றது. இந்த நிலைமையில், ரணில் தலைமையிலான அரசாங்கம் சாதித்த விடயங்கள் சரிவர மக்களுக்கு பிரசாரப்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை அவர்கள் மீள் வாசிப்புச் செய்யவேண்டும்.

இதேவேளை, சஜித் பிரேமதாச அணியின் பிரசாரங்கள் இப்போதுதான் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. ஆனாலும், அவர் பற்றி 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இருந்த மக்களின் பார்வையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே,வெற்றியை உறுதிப்படுத்த வேண்டுமாயின், கருத்துக் கணிப்புக்களை நம்பியிருக்காமல் காத்திரமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதே நல்லது.

இந்த வரிசையில், மேடைகளில் வாய்க்கும் மூளைக்கும் தொடர்பில்லாமல் பேசுகின்ற அரசியல்வாதிகள், யாருக்கும் புரியாத விதத்தில் சத்தமாகப் பேசுகின்ற அரசியல்வாதிகள், முன்னாயத்தம் எதுவும் இல்லாமல் வந்து உளறுகின்ற தலைமைகள் மற்றும் யாருக்கு ஆதரவாகப் பேசுகின்றோம் என்பதைக் கூட மறந்துவிடுகின்ற பேச்சாளர்கள் எனப் பலவகையான ஆட்களைத் தேர்தல் மேடைகளில் நாம் கண்டுகொண்டிருக்கின்றோம்.

கோட்டாபயவின் ஆட்சியில் பங்காளராக இருந்து விட்டு, இப்போது வந்து தேச நலன் பற்றிப் பேசமுடியாத பல எம். பிக்கள் இருக்கின்றனர். இனவாதத்தை தவிரவேறு எதனையும் பேசத் தெரியாத எம்.பிக்கள் உள்ளனர். அதுமட்டுமன்றி, மேடைகளில் மக்களைக் கவரும் விதத்தில் கதைக்க முயன்று மூக்குடைபட்ட அரசியல்வாதிகளும் இல்லாமலில்லை.

மறுபுறத்தில், நேரடி விவாதம் என்ற பெயரில் நடக்கின்ற அபத்தமான செயல்களும், இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகள் அரசியல்வாதிகள் சண்டை பிடிக்கின்ற போக்கும் அதனை ஒளிபரப்புவதில் இன்பம் காணும் ஊடக அதர்மமும் இன்னுமொரு பக்கம் மக்களை முகம் சுழிக்கவைத்துக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

ஒவ்வொரு சிறிய பெரிய நடவடிக்கையும் குறித்த வேட்பாளரின் வெற்றிக்கு தடையாக அமைகின்றன. செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அவரது கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன, அல்லது செலவு வைக்கப்படுகின்றன என்பதை மறந்து விடக்கூடாது.

முன்னொரு காலத்தில் வரையறுக்கப்பட்ட ஊடகங்களே இருந்தன. செய்திகள் தணிக்கை செய்யப்பட்டு, சரி பிழை பார்க்கப்பட்டு, ஊடக தர்மத்தோடு வெளியாகின. இப்போது இந்த நிலை மாறி விட்டது. ஜனாதிபதி வேட்பாளரோ, அமைச்சரோ, எம்.பியோ கோபப்பட்டாலும், கொமடித்தனமாக பேசினாலும், தரக் குறைவாக நடந்து கொண்டாலும், உடனேயே அதன்போது வெளியில் பேசுபொருளாகிவிடும்.

குறிப்பாக, சில முஸ்லிம் அரசியல் தலைவர்களின் அண்மைக்கால உரைகள் கேலிக்கூத்தாக மாறியிருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு முக்கியத்துவ மிகக் காலப் பகுதியில் ஒரு முஸ்லிம் கட்சியின் தலைவர் 'பஸ்ஸை ' உவமானமாக எடுத்து பேசும் பாணியில், காத்திரமான தன்மையில் இருந்து விடுபட்டுப் போனார். இது ஒரு விதகேலியான விடயமாக மாறிப் போனது.

அதேபோல், இன்னுமொரு முஸ்லிம் கட்சியின் தலைவர் நல்ல விடயங்களைச் சொன்னாலும், கிராமத்து வழக்கில் பேசும் தோரணையில், ஒரு கோர்வையாக இல்லாமல் விடயங்களை முன்வைப்பதால் இவரது உரையும் அநேக சந்தர்ப்பங்களில் சமூக வலைத்தள ஒருவித புதினமாக மாறிவிடுகின்றது.

இதேவேளை, மற்றுமொரு முஸ்லிம் கட்சியின் தலைவர் உணர்ச்சிவசப்பட்டு, ஆத்திரப்பட்டு சத்தமாகப் பேசி விட்டு மேடையிலிருந்து இறங்குவதைக் காண்கின்றோம். இந்த உரையில் பெறுமதியான சாரம்சங்கள் இருப்பதில்லை.

இன்னும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் மேடையில் அர்த்தமற்ற விதத்தில் மேடையில் சத்தமிடுகின்றனர். வேறு சிலர் மேடையில் பேசுவதால், குறிப்பிட்ட வேட்பாளருக்கு இருக்கின்ற வாக்குகளில் ஒன்று இரண்டு குறைந்து விடுமோ என்று எண்ணும் நிலை ஏற்படுகின்றது.

ஒரு நாட்டின் அல்லது முஸ்லிம், தமிழ் சமூகத்தின் தலைவர்கள் இதில் அக்கறை செலுத்த வேண்டும். குறிப்பாக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளாவர். எனவே, அவர்கள் நடன பாணியில், கிண்டல் தனமாக அல்லது உப்புச்சப்பற்ற விதத்தில் பேசுவதை, அல்லது வெறுமனே உரக்கப் பேசுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

நமது எதிரி அல்லது நமக்குப் போட்டியாகவுள்ள வேட்பாளர் எப்படிப்பட்டவராகக் கூட இருக்கலாம். அதற்காக நாம் நமது கௌரவத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது. இது பெரும்பான்மை தலைவர்கள், சிறுபான்மை அரசியல்வாதிகளுக்கு பொதுவான அறிவுரையாகும்.

நமது உரைகளில் கேலியான விடயங்களை, நக்கலாகக் கூறுவதால் அங்கு வந்திருக்கின்ற மக்கள் கை தட்டி ஆரவாரம் செய்வார்களே ஒழிய அது நம் மீதான மதிப்பை அதிகப்படுத்தாது. கேலிக் கூத்தான பிரசாரங்களுக்குச் சமூகவலைத்தளங்களில் அதிக 'லைக்குகள்' கிடைக்கலாம். ஆனால், அது வாக்களிப்பதற்கு அவர்களைத் தூண்டாது என்பதையும் கவனிக்க வேண்டும்.

அந்த வகையில், பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை அரசியல்வாதிகள் எல்லோரும் பொதுத் தளத்தில் அர்த்தபுஷ்டியாகவும் மக்களைக் கவரும் விதத்திலும் பிரசாரம் செய்வது எப்படி என்பதை இன்னும் கற்றுக் கொள்ளவேண்டியுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய் விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால், எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுவுமே முழுமையாகாது. நிஜ வாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி: பருத்தியூர் பால வயிரவநாதன்

## கடிதங்கள்

### கால்நடைகள் உயிரிழப்பு




முல்லைத்தீவு- திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சியின் இரணைமடு சந்தி வரையான ஏ-9 வீதியில் நாள் தோறும் வாகன விபத்துகளில் கால்நடைகள் உயிரிழப்பதும் படுகாயமடைவதும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு அருகில் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு உரிய விளம்பரப் பலகைகளை நடுகை செய்யுமாறு இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக இச்சம்பவம் அடிக்கடி நடைபெற்று வருகின்றது.

திருமுறிகண்டி, பொன்நகர், இந்துபுரம், அறிவியல் நகர் உட்பட பல பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் நிலையில் வீதியின் இரு மருங்கிலும் கால்நடைகள் உலாவும் இடம் என விழிப்புணர்வு பதாகைகளை நாட்டுவதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

பெருமளவு குடும்பங்கள் இப்பகுதிகளில் வாழ்கின்ற நிலையில் தமது வாழ்வாதாரத்திற்காகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கால்நடைகள் குடிநீருக்காக வீதியினை கடக்கின்ற போதே விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றமையினால் சாரதிகள் குறித்த பகுதியில் கால்நடைகளைக் கருத்திற்கொண்டு வேகக் கட்டுப்பாட்டினை பேணி ஒத்துழைக்குமாறும் கால்நடை வளர்ப்பாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- நடராசா கிருஸ்ணகுமார்



# சமூகமயமாக்கலும் குழந்தைப் பருவமும்

குமாரசிங்கம் தனுஷா,
2ஆம் வருட கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வி –பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்.



சமூக மயமாக்கலானது சமூகத்தின் விதிமுறைகள் கருத்துக்கள் ஆகியவற்றை உள்வாங்கும் வழிமுறையைக் குறிக்கும். தமது பண்பாட்டைக் கற்றுக் கொள்வதற்கும் அதனைப் பின்பற்றி வாழ்வதற்கும் மனிதனுக்கு சமூக அனுபவம் தேவையாக உள்ளது. ஆகவே, சமூக மயமாக்கலே ஒவ்வொரு மனிதனது வாழ்க்கை முழுவதுமான கற்றலின் வெளிப்பாடாக உள்ளது. சமூக மயமாக்கலானது வாழ்நாள் முழுவதும் இடம்பெறுவதாகும். அதிலும் சமூக மயமாக்கல் ஒரு மனிதனின் குழந்தைப் பருவத்தில் இடம்பெறுவது அவனின் எதிர்காலத்தில் வாழப்போகும் வாழ்க்கைக்கும் சமூகத்தின் இருப்பிற்கும் பெரிதும் தாக்கம் புரியும்.

சமூகத்தின் வளர்ச்சியில் குடும்பம் என்பது அடிப்படை அலகு என்றே கூற வேண்டும். காரணம் குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்தே சமூகம் என்ற கட்டமைப்பு உருவாகின்றது. எனவே, குடும்பத்தில் குழந்தைகள் என்பவர்கள் மற்றவர்களைச் சார்ந்து வாழ்வதோடு, மற்றவர்களின் தொடர்பு மூலமாகத்தான் சமூகத்திற்கு உள்நுழைகின்றார்கள். குழந்தைகள் குடும்பத்திலிருந்தே மற்றவர்களுடன் சேர்ந்து வாழுதல், பகிர்ந்து உண்ணுதல், குழு வாழ்க்கை முறை என்பவற்றை கற்றுக் கொள்கின்றார்கள். மேலும், இவை சமூகநிலை, மதம் மற்றும் இனம் என்பவற்றின் பிரதிபலிப்பே என்று கூறலாம்.

ஒரு குழந்தையின் வாழ்க்கையின் முதல் சில ஆண்டுகளில் தங்களுடன் அதிகமாக இருப்பவர்களை அடிப்படையாகக் கொண்டே தகவல் தொடர்புக்கான வழிமுறைகளையும் மொழிகளையும் உருவாக்குகின்றார்கள். வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களை திரும்பத் திரும்ப சொல்வதன் மூலமும் மற்றவர்களின் உணர்வுகளுடன் மற்றும் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள முகபாவனைகள் மற்றும் சைகைகளைப் படிப்பதன் மூலமும் அவர்கள் வாய்மொழி மற்றும் சொற்கள் அல்லாத தொடர்பைக் கற்றுக்கொள்கிறார்கள். இவ்வாறாக குழந்தை குடும்பத்தில் இருந்து கற்றுக்கொண்டு பின் சமூகத்துடன் இணைகின்றார்கள்.

குழந்தைப் பருவத்தில் சமூக மயமாக்கலில் குடும்பத்திற்கு அடுத்ததாக பாடசாலையைக் கூறலாம். காரணம் பாடசாலை புத்தக அறிவு மட்டும் வழங்காது, வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது மற்றும் நோக்கத்திற்கமைய குறித்த வேலை செய்து முடிப்பது போன்ற வாழ்க்கைக்குத் தேவையானவையும் கற்பிக்கப்படுவதே ஆகும். பாடசாலையில் ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பிற மாணவர்கள் உடனான தொடர்புகளின் மூலம் சமூக திறன்களைக் குழந்தைகள் கற்றுக் கொள்கின்றார்கள். உதாரணமாக ஆசிரியர் விதிக்கு; கட்டளைக்கு கீழ்படிவதன் முக்கியத்துவத்தையும் வெற்றிபெற அமைதியாக இருக்கவும் காத்திருக்கவும் ஆர்வமாகச் செயல்படவும் கற்றுக் கொள்கின்றார்கள். மேலும், வயதில் மூத்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான தொடர்பு நண்பர்களுக்கிடையேயான தொடர்பை விட வித்தியாசம் என்பதைப் புரிந்து கொள்கின்றார்கள். சில குழந்தைகளுக்கு குடும்பத்திற்கு வெளியே உள்ள தகவல் தொடர்புக்கான முதல் இடமாகப் பாடசாலை காணப்படும். எனவே, கற்றல் சூழலுக்கு வந்தவுடன் ஏனையவர்களுடன் இணைவதற்கான சந்தர்ப்பங்களை பாடசாலை கொடுக்கின்றது.

தற்காலத்தில் குழந்தைகளுக்கு சமூக மயமாக்களின் வெகுஜன ஊடகம் என்பது முக்கியமானது ஒன்றாகும். குழந்தைகளிடம் கையடக்க தொலைபேசி பாவனையானது அதிகம் எனலாம். மற்றவர்களுடன் இலகுவாக நட்பு கொள்வதற்கு இது பெரிதும் வாய்ப்பாக அமைகின்றது. மேலும், பல சமூக ஊடகங்களைக் கையாளுவதற்குக் குழந்தைகள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றார்கள். இதன் மூலம் அவர்கள் தங்களுக்குஎன்றும்முகம் அறியாதவர்களையும் நட்புக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது. மேலும், முக்கியமானவை பெற்றோர்களின் அவதானிப்பின் கீழ் குழந்தைகள் வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்துவது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு சிறப்பானதாக அமையும். சிந்திக்க முயலும் குழந்தைகள் தனக்கு ஏற்படும் வினாக்களைப் பெற்றோரிடம் அல்லது வேறு யாரிடமும் கேட்டுத் தெளிவு பெறாவிட்டின், தற்போது முகம் அறியாதவரிடம் பதில் கேட்டுத் தெளிவு பெறுகின்றமை முக்கியமானதாகும். எனவே, தற்போது குழந்தைகள் சமூகத்துடன் இணைவதற்கு வெகுஜன ஊடகம் துணைபுரிகின்றது.

சமூக மயமாக்கலின் குழந்தைப் பருவத்தில் நட்புகளின் பங்கு என்பது கட்டாயமானதாகும். குழந்தைகள் தனது கற்றல் சூழலுக்கு வந்த பிறகு அதிகமான நேரம் செலவிடுவது நண்பர்களுடனே ஆகும். எனவே, நண்பர்கள் மூலமாக அவர்களின் குடும்ப கலாசாரங்களை பகிர்ந்து கொள்ளுதல், புதிய நபர்களை அறிந்தல், புதிய சூழல்களை அறிதல் என்பவற்றை அறிந்து கொள்கின்றார்கள். குழந்தைப் பருவத்தில் ஏற்படும் நட்பானது பெற்றோர்களுக்கு புதிய நட்புக்களை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது.

எனவே, சமூக மயமாக்கல் குழந்தைப் பருவத்தில் முக்கியமானதாகும். குழந்தைகள் முதல் முதலாக குடும்பத்திலிருந்து அடுத்த கட்டமாக சமூகத்துடன் இணையும் பருவம் என்று கூறலாம். தகவல் தொடர்பு திறன், நட்பு, பகிர்ந்து கொள்ளும் தன்மை, நம்பிக்கை என்பன வலுப்பெற்று குழந்தை அவர்கள் எதிர்காலத்தில் சமூகத்துடன் நற்பிரஜையாகவும் நட்புறவாக ஏனையவர்களுடன் வாழவும் அடித்தளம் இடுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆகவே, குழந்தைப் பருவமானது ஒரு மனிதனுக்கு மிக முக்கியமாவதுடன், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் சமூக மயமாக்கலின் முக்கியத்துவத்தை அறிந்து குழந்தைகளுக்கு அதனை ஊக்குவித்து வளர்க்க வேண்டும்.





# “உலகிற்கு எடுத்து சொல்வோம்”



பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

“அங்கிருக்கும் தேங்காயில் உள்ள குடுமியை அழகாக்கியும், மற்றைய நார்களை அப்புறப்படுத்தியும், நன்றாக கழுவியும் எடுத்து வாப்பா. கும்பத்திற்கு வைக்க வேண்டும்”.

அமாவாசை, பொங்கல் மற்றைய ஏனைய ஆன்மிக வைபவங்களில் எனது அப்பா அடிக்கடி கூறும் வாசகம் இது!

அவரது குரல் இன்றும் என் மனக்கண் முன் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அப்பா அதீத தெய்வ பக்தி உடையவராக இருந்ததனால், எங்கள் வீட்டில் நடக்கும் சகல வைபவங்களிலும் தேங்காய்க்கு தனி முன்னுரிமை !

அனைவரது வீடுகளிலும் பயன்படுத்தப்படும் மிக உன்னதமான பொருள் தேங்காய்.

**“நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கோல் என வேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருத லால்”**

என அவ்வையார் தனது மூதுரையில் தென்னையின் நன்றி உணர்வினை , அதன் மகத்துவத்தினைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

“பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு தென்னையை நட்டால் இளநீரு”, என்ற பழமொழி பேச்சு வழக்கில் இருந்து வருகின்றது.

இதற்கு காரணம் தென்னையானது பல்வேறு விதமான பயன்தரு அம்சங்களை தன்னகத்தே கொண்டிருப்பதனால் மக்கள் இவ்வாறான பழமொழியினை வழக்கில் உபயோகித்து இருந்திருக்கக் கூடும்.

வாஸ்கொடகாமா என்பவர் ஒரு போர்த்துக்கேய நாடு காண் பயணி!

இவருடன் சேர்ந்து கப்பலில் பயணம் செய்த போர்த்துக்கீச மாலுமிகள் முதன் முறையாக தேங்காயின் அமைப்பைப் பார்த்து, அதற்கு தேங்காயெனப் பெயரிட்டதாக வரலாற்று மூலமாக அறிய முடிகின்றது.

‘கோகோ’ (coco) என்பது தேங்காய்க்கான ஸ்பானிய மொழி சொல்.

அதாவது ‘மூடிய முகம்’ அல்லது ‘சிரிக்கும் முகம்’ என பொருள்படும்.

தேங்காயின் மேற்பரப்பில் புன்னகைக்கும் முகமாகத் தெரிந்த மூன்று ஓட்டைகளைப் பார்த்து, இதற்கு அவ்வாறு பெயரிட்டனர். அது பருப்பு வகை உடையதாக விளங்கியதால் பிற்காலத்தில் நட் ( nut) என்ற பிற்சேர்க்கையையும் இணைத்து கோகோநட் (coconut) என்று அழைக்கப்பட்டது.

மனிதனது கலாசார நிகழ்வுகளிலும், ஆரோக்கியத்திலும், உணவாகவும், மருந்தாகவும், விளங்குவது தேங்காயும், அம்மரத்தின் பாகங்களும் ஆகும்.

தென்னை, தனது அடியிலிருந்து நுனிவரை இருக்கின்ற அனைத்து அம்சங்களையும், மனிதனது வாழ்க்கையில், கர்ணனைப் போலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதனால் தான், தென்னை மரத்தினை ஒரு ‘கற்பக விருட்சம்’ அல்லது ‘வாழ்க்கை மரம்’ என்றும் அழைப்பர்.

இளநீர், தேங்காய் போன்றவற்றினை விற்பனை செய்து, அதன் மூலம் தமது அன்றாட வாழ்க்கையை நடத்துபவர்கள் இலட்சக் கணக்கானோர்.

தென்னை மரம், மக்களின் வாழ்வாதாரத்தை குறிப்பதனால், மாலைத்தீவு மக்கள் தென்னை மரத்தை கற்பக விருட்சமாகக் கருதுகின்றனர்.

அது மருத்துவம் தொடக்கம் கப்பல் கட்டுதல் வரை பயன் தருகின்றது என்பது அவர்களின் நம்பிக்கை.

தென்னை மரத்தை மத்தியில் கொண்டு, அதன் இரு புறங்களிலும் சாய்வாக இரு தேசிய கொடிகளை ஏந்திய கம்பங்களையும், இக்கம்பங்களுக்கு மத்தியில் பிறையையும் நட்சத்திரத்தையும் கொண்டது மாலைத்தீவின் தேசிய சின்னமாகும்.

இந்துக்கள் தமது ஆன்மிகக் கருமங்களில் தேங்காயைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். கோவில்களில் ‘சிதறுகாய்’ உடைப்பதற்கான காரணம், மக்கள் தமது அகங்காரத்தினை அழித்துக் கொள்ள வேண்டுமென கருதப்படும் ஓர் ஐதீகம். இதுபோல, இன்னும் பல ஆன்மீகத் தொடர்புகளுடன் தொடர்புடையது தேங்காய். இத்தகைய நன்மைகளை மனிதருக்கு வழங்கக்கூடிய தேங்காய்க்கு உரிய நாளாக இன்று காணப்படுகின்றது.

ஆம்! ‘சர்வதேச தேங்காய் தினம்’த்தை 2009இலிருந்து, ஒவ்வொரு வருடமும், செப்டெம்பர் மாதம் இரண்டாம் திகதியன்று ஆசிய மற்றும் பசிபிக் தேங்காய் சமூகம் (APCC) கொண்டாடி வருகின்றது.

இருபத்தொரு உறுப்பு நாடுகளைக் கொண்ட இச்சமூகத்தின் (APCC) தலைமையகம் இந்தோனேசியாவின் தலைநகரமான ஜகார்த்தாவில் அமைந்துள்ளது.

ஆசிய நாடுகளான இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, வியட்நாம், டிமோர் லேஸ்தே ஆகிய எட்டு நாடுகளும், பசிபிக் நாடுகளான மைக்ரோனீசியக் கூட்டு நாடுகள், பிஜி, கிரிபாட்டி, மார்சல் தீவுகள், பப்புவா நியூகினி, சமோவா, சொலமன் தீவுகள், டொங்கா, வனவாட்டு ஆகிய ஒன்பது நாடுகளும், கரீபியன் நாடான ஜமேக்காவும், ஆபிரிக்க நாடுகளான கென்யா, கோட்டிவார் ஆகிய இரு நாடுகளும், தென்னமெரிக்க நாடான கயானாவும் சேர்ந்து உலக உற்பத்தியில் தொண்ணூறு சதவீதமான தென்னையை உற்பத்தி செய்கின்றன.

இத்தினத்தின் நோக்கம் முதலீடுகளை ஊக்குவிப்பதுவும், உறுப்பு நாடுகளிடையே தேங்காய் தொழிலின் வளர்ச்சியை மேம்படுத்துவதும் ஆகும்.

இந்த ஆண்டின், இத் தினத்திற்கான கருப்பொருளாக அமைவது ‘சுற்றுப் பொருளாதாரத்திற்கான தேங்காய்: அதிகபட்ச மதிப்புக்கான கூட்டாண்மையை உருவாக்குதல்’ என்பதாகும். நிலைத்தன்மையை ஆதரிக்கும் மற்றும் கழிவுகளைக் குறைக்கும் விதத்தில் தேங்காய்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினையும் எடுத்துக் காட்டுகிறது.

மக்களினது ஏழ்மையை நீக்குவதில் தேங்காய்க்கு முக்கிய பங்கிருக்கின்றது என்பதனை மக்களுக்கு எடுத்துரைப்பதாகவும், இத்தினம் அமைகின்றது.

சுமார் 70 முதல் 80 ஆண்டுகள் வரை வளரக் கூடிய தென்னை மரம் இலங்கையில் அதிகமாக புத்தளம், குருநாகல், கொழும்பு போன்ற முக்கோணப் பிரதேசத்தில் வளர்கின்றது.

இது இலங்கையிலுள்ள முதலாவது தென்னை முக்கோணப் பிரதேசம். யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதான இரண்டாவது தென்னை முக்கோணத் திட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சர்வதேச தெங்கு தினத்தின் ஊடாக எமது நாடானது தென்னை சார்ந்த 150 உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தெங்கு சார்ந்த மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதை விட, பெறுமதி சேர்க்கப்பட்ட தெங்கு ஏற்றுமதி பொருட்களின் மூலம் பெருமளவான அன்னிய செலாவணியை சம்பாதிக்க முடியும்.

தெங்கை அபிவிருத்தி செய்வதற்காக எமது நாட்டில் 1971இல் தெங்கு அபிவிருத்தி அதிகாரச் சபையானது, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளது. இது தவிர, தென்னைக்கென ஆராய்ச்சி நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளது.

2024 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி ‘இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனமானது’ (The Ceylon Chamber of Coconut Industries - CCCI) கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நிலைபேறாண்மை வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் உலகளாவிய சந்தையை அடைவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், தென்னை தொழில் துறையில் பரந்த வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் முதல் தடவையாக இந்த ஒருங்கிணைந்த அமைப்பானது இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

தென்னை தொழில் துறையானது, ஆண்டுக்கு 800 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாயை ஈட்டுகிறது. இதை மேலும் வளர்த்து, 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தை இலக்காகக் கொண்டு இலங்கையின் தென்னை உற்பத்திகளின் தரம் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் கிராமப்புற பொருளாதாரத்திற்கு வலு சேர்க்கும் ஒரு முக்கிய காரணியாக பலராலும் அறியப்படும் தென்னை கைத்தொழில், சுமார் 455,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பரவியுள்ளது. இது ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனமானது மூலோபாய திட்டமிடல், சந்தை விரிவாக்கம்மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான கண்டுபிடிப்புகள் மூலம் தென்னை கைத்தொழிலின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துமென கூறப்படுகின்றது. மேலும், நிலைபேறான்மை நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் பல்வேறு தயாரிப்புகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் இலங்கையை தென்னை உற்பத்தியில் உலகளாவிய முன்னணி நாடாக மாற்றுவதே இந்த சம்மேளனத்தின் நோக்கமாகும்

சர்வதேச தென்னை சமூகத்தின் 60ஆவது அமர்வு கூட்டமும், அமைச்சர்கள் சார்ந்த கூட்டமும் எதிர்வரும் நவம்பர் மாதம் 2024 ஸ்ரீலங்காவில் நடத்துவதற்கு ஸ்ரீலங்காவின் அமைச்சரவை அண்மையில் அனுமதி அளித்திருந்தது. இவ்வாறு பல்வகைப்பட்ட பலனைத் தரக்கூடிய இன்றைய தினத்தின் பெறுமதியினை நாமும் உலகிற்கு எடுத்துச் சொல்வோம்.



# மாதவிடாய் வறுமை



**மாதவிடாய் நாட்கள் வெட்கப்படுவதற்குரியவை அழுக்கானவை என்று கூறப்படும் சமூக வரன்முறைகளை எதிர்த்தலில் ஆண்களும் சிறுவர்களும் பங்கேற்கும் வாய்ப்பாக அமைந்தன**

**மாணவிகளின் பிரச்சினையினை தீர்ப்பதற்காக அரசாங்கத்தினால் பாடசாலைகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்றது**

**ஆண்கள் வெட்கப்படுகின்ற சூழல் காணப்பட்ட காலம் போய் இன்று ஓரளவாவது ஆண்களுடைய மனநிலையானது மாறி உள்ளதனை காணக்கூடியதாக உள்ளது**



**கணேஸ்குமார் மதியந்தி,**
**ஊடககற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(திங்கட்கிழமை (02) தொடர்ச்சி...)

மாதவிடாய் சுகாதார நாளின் நோக்கங்கள் என்கையில், மாதவிடாய் நாட்களில் பெண்களும் சிறுமியரும் சந்திக்கும் சவால்களையும் சிக்கல்களையும் குறித்து அலசுதல்.

இதற்காக மேற்கொள்ளப்படும் வளர்முகமான புத்தாக்கத் தீர்வுகளை முன்னிலைப்படுத்தல்.

பெண்கள் மற்றும் சிறுமியரின் உரிமைகளை அங்கீகரித்து ஆதரிக்கும் உலகளவிலான இயக்கம் வளர ஊக்குவித்தல்.

இதே நோக்கத்தோடு செயற்படும் அமைப்புகளுக்கிடையே உள்ளிட்ட அளவிலும் தேசிய அளவிலும் இணைப்பு ஏற்படுத்தல்.

கொள்கை உரையாடல்களில் ஈடுபடுதல், உலக, தேசிய, உள்ளிட்ட அளவிலான கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களாக மாதவிடாய் சுகாதார மேலாண்மை ஒருங்கிணைப்பை எடுத்துச் செல்லல் சமூக ஊடகங்கள் உட்பட்ட பல ஊடகச் செயற்பாடுகளுக்கான வாய்ப்புகளைத் தோற்றுவிக்கிறது.

உடற் கூறு பற்றிய அறிதல், தன்னாட்சி மற்றும் பாலின சமத்துவத்துத்தை வளர்த்தெடுக்கும் நாடு கடத்த இயக்கத்தை இந்நாள் உருவாக்குகிறது.

மே 28, 2015 இல் "மாதவிடாய் குறித்த தயக்கத்துக்கு முடிவு கட்டுவோம்" என்ற கருத்தை வலியுறுத்தி அனைத்துலக அமைப்புகளும் தனிநபர்களும் ஒன்றிணைந்து இரண்டாவது மாதவிடாய் சுகாதார நாளை அனுசரித்தனர்.

33 நாடுகளில் 127 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பெண்கள் மற்றும் சிறுமியரின் சிக்கல்கள், அவை தொடர்பான கொள்கைகளை முன்னெடுத்தல், விளிம்பு நிலையோரை அணுகல், மாதவிடாய் நாட்கள் வெட்கப்படுவதற்குரியவை என்றும் அழுக்கானவை என்றும் கூறப்படும் சமூக வரன்முறைகளை எதிர்த்தல் போன்ற விடயங்களில் ஆண்களும் சிறுவர்களும் பங்கேற்கும் வாய்ப்பாக அந்நிகழ்வுகள் அமைந்தன. அதுமட்டுமல்லாமல், பாடசாலை மாணவிகளின் பிரச்சினையினை தீர்ப்பதற்காக அரசாங்கத்தினால் பாடசாலைகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்றது. ஆரம்பக் காலங்களில் பெண்களுடைய மாதவிடாய் துவாய்களை வாங்குவதற்கே ஆண்கள் வெட்கப்படுகின்ற ஒரு சூழல் காணப்பட்ட காலம் போய் இன்று ஓரளவாவது ஆண்களுடைய மனநிலையானது மாறி உள்ளதனை காணக்கூடியதாக உள்ளது.

இன்று பல திரைப்படங்கள் மற்றும் குறுத்திரை படங்கள் என்பவை இந்த மாதவிடாய் வறுமை தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவதைக் காண முடிகிறது. உதாரணமாகக் காதல் திரைப்படத்தின் எடுத்துக் கொண்டால் அதில், வரும் ஒரு காட்சியில் இதற்குச் சிறந்ததொரு உதாரணமாக சக்திவேல் பாலாஜி அவர்களின் இயக்கத்தில் 14 டிசம்பர் 2004 ஆம் ஆண்டு பரத் மற்றும் சந்தியா நடிப்பில் வெளியான காதல் திரைப்படத்தில் சந்தியா ஒரு கட்டத்தில் மாதவிடாய் சுழற்சியினால் வயிற்று வலியில் நடந்து செல்கின்ற பொழுது பரத் என்ன நடந்தது என கேட்கின்ற பொழுது, அது பெண்களினுடைய பிரச்சினை உனக்குப் புரியாத என கூறிய போது, பரத் சந்தியாவின் கையைப் பிடித்து அந்த நிலையினை உணர்ந்து அதற்கான வழிவகைகளைக் கையாளும் காட்சியினை மிக அழகாகக் காட்டியிருப்பார்கள்.

உண்மையில் இன்று சமூகத்தில் உள்ள ஆண்களில் ஓரளவான ஆண்கள் இது தொடர்பான விழிப்புணர்வைக் கொண்டுள்ளதோடு, மாதவிடாய் துவாய்களை வாங்குவதற்கும் வெட்கப்படாத தைரியமாக வாங்கும் நிலையினை நோக்கி நகர்வதைக் காணக் கூடியதாக உள்ளது. அதிகளவான குறுந் திரைப்படங்களும் இது தொடர்பாக வெளிவருவதனை சமூக வலைத்தளங்களில் காணக்கூடியதாகவும் உள்ளது. கிராமப் புறங்களில் உள்ள பால்நிலை நியமங்களுக்குள் கட்டுப்படக்கூடிய ஆணாதிக்கத்தைப் பின்பற்றுகின்ற ஒரு சில ஆண்களினுடைய மனநிலையிலும் மாறி மாதவிடாய் துவாய்களை வாங்குவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு அதனைக் கடையில் வாங்கி ஒரு பேப்பரின் மூலம் சுற்றி வருகின்ற தன்மை மாறுகின்ற பொழுது இந்த மாதவிடாய் வறுமைக்கான முற்றுப்புள்ளி எம்மால் காண முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது

இந்தியாவில், குறைந்த விலையிலான நாப்கின்ஸ் கண்டுபிடிப்புகளுக்காகவே பத்மஸ்ரீ விருது பெற்றவர் அருணாசலம் முருகதாஸ். அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'டைம்' வார இதழ் உலகில் அதிக செல்வாக்கு மிக்க மனிதர்கள் பட்டியலில் அருணாசலம் முருகதாஸை இணைத்திருந்தது. இவரது வாழ்க்கைக் கதையை இந்தி திரைப்பட இயக்குநர் ஆர்.பால்கி 'பேட்மேன்' P (Pad Man) என்கிற பெயரில் திரைப்படமாக எடுத்திருக்கிறார்.

எனவே, மாதவிடாய் சுழற்சி என்பது உடலின் ஒரு செயற்பாடு மட்டுமே. அனைத்து ஆண்களினுடைய மனநிலையிலும் மாதவிடாய் சுழற்சி என்பது பெண்களினுடைய ஒரு உபாதை என்பதனை உணர்ந்து அதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கு என்று முன் வருகின்றார்களோ அன்று இந்த ஒட்டுமொத்த மாதவிடாய் வறுமை ஒளியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை, மாற்றங்களை நோக்கி நகர வேண்டியது ஒவ்வொரு மனித மனங்களில் மாத்திரமே உள்ளது.

(முற்றும்)

# 158 ஆவது வருடத்தில் இலங்கை பொலிஸ்








நூறு வருடங்களுக்கு மேல் ஒரு நீண்ட வரலாற்றுக்கு உரித்துடைய இலங்கை பொலிஸ் 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 03 ஆம் திகதியன்று 158ஆவது பொலிஸ் தினத்தைக் கொண்டாடுகின்றது. 1866 செப்டெம்பர் 03ஆம் திகதி ஜி.டபிள்யூ. ஆர்.கெம்பல் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். அன்றையதினமே அரசியலமைப்பின் படி இலங்கை பொலிஸ் ஆரம்பிக்கப்பட்ட தினமாகக் கருதப்படுகின்றது.

எவ்வாறாயினும், 1602ஆம் ஆண்டு ஒல்லாந்தர்களால் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றப்பட்ட பின்னர் 1650ஆம் ஆண்டு கொழும்பு மாநகரசபையினால் இரவு நேரம் நகரத்தைப் பாதுகாப்பதற்காக நகரப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்கும் யோசனை முன் வைக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய இரவு நேரம் ரோந்து நடவடிக்கைக்காக நகரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நால்வர் நியமிக்கப்பட்டனர். இதுவே இலங்கை பொலிஸாரின் முதலாவது கடமையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையை 1796 பெப்ரவரி 16ஆம் திகதி ஒல்லாந்தர்களிடமிருந்து பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்டது. அன்றிலிருந்து சட்டம் மற்றும் ஒழுங்கு பிரித்தானிய இராணுவத்தினர்களால் நிருவகிக்கப்பட்டது. பொலிஸாரின் மேற்பார்வைக்காகவும் மேலதிக பணிக்காகவும் அரச நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால், அப்போதைய ஆளுநரான பிரெட்ரிக் நோர்த், பிரதம நீதியரசரின் ஒப்புதலுடன், பொலிஸ் மேற்பார்வை செய்யும் பொறுப்பை நீதிவான் மற்றும் நீதியரசர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், நாட்டை மறு சீரமைப்பு செய்வதற்காக ஆற்றல் மிக்க ஒரு நபரைத் தேடிய ஆளுநர் பிரெட்ரிக்நோர்த் இந்தியாவில் பொலிஸார் தனது கடமையைப் பின்பற்றும் நடவடிக்கைகளைக் கண்காணித்தார். இதன்போது மும்பாய் பொலிஸ் உயர் அதிகாரியாகக் கடமையாற்றிய ஜி.டபிள்யூ.ஆர்.கெம்பலிடம் இப்பணியை ஒப்படைக்குமாறு மும்பை ஆளுநரால் பரிந்துரைக்கப்பட்டது.

ஆளுநரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி. டபிள்யூ.ஆர் கெம்பல், 1866 செப்டெம்பர் 03ஆம் திகதியன்று தலைமை பொலிஸ் அதிகாரியாகத் தனது கடமையை ஆரம்பித்தார். 1867ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தைத் திருத்தியமைத்து பொலிஸ் படைத் தலைவரின் பதவி நிலையான தலைமை பொலிஸ் அதிகாரி பதவி நிலையிலிருந்து பொலிஸ் மா அதிபர் பதவி நிலைக்கு மாற்றியமைக்கப்பட்டது.

1843இல் பொலிஸ் கட்டளைச் சட்டத்தை இரத்து செய்து நாடு பூராகவும் பொலிஸ் நிலையங்களை அமைக்க ஆளுநரால் அதிகாரம் வழங்கப்பட்டது. 1845இல் பொலிஸ் பரிசோதகர் பதவி நிலை அறிமுகப்படுத்தப்பட்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப்பட்டதுடன் பொலிஸ் பியோன் (சேவகன்) பதவி நிலையை இரத்து செய்து பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி நிலையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

1947 ஜூன் மாதம் 01ஆம் திகதி முதலாவது பொலிஸ் மா அதிபராக ரிசட் அலுவிஹாரே தனது கடமையை ஆரம்பித்தார். அப்போது உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின்; கீழ் கொண்டுவரப்பட்டது. 1948 சுதந்திரம் பெற்றப்பின்னர், பொலிஸ் படையணி காலனித்துவத்துவத்திலிருந்து பொலிஸ் சேவையாக மாற்றும் பொறுப்பை ரிச்சட் அலுவிஹாரேயால் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

1870 காலப்பகுதியில் பெரிய அளவிலான வணிகக் குற்றங்கள், மர்ம கொலைகள் மற்றும் ரகசியங்களைக் கண்டறியும் நோக்கத்துடன் சிவில் உடையுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், குற்றவியல் விசாரணைத் திணைக்களம் அக்காலப்பகுதியில் தனது நோக்கத்தை விஷ்தரிப்பதற்காக அவ் திட்டத்தின் கீழ் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் 05 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதன் மூலம் வழங்கப்படும் சேவைகளை விரிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றங்களைத் தீர்ப்பதற்காக உலகத்தில் விசேட நிபுணத்துவம் கொண்ட சாட்சியாக ஏற்றுக்கொள்ளும் பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவானது 1948 நவம்பர் மாதம் இலங்கை பொலிஸ் கடமைக்காக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாடு பூராகவும் 54 பிரிவுகளில் 400 பொலிஸ் மோப்ப நாய்களினூடாக குற்றவியல் விசாரணைகள், போதைப்பொருள் மற்றும் வெடிபொருட்கள் அடையாளம் காணப்படும் கடமைகளில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைச் செய்ய முடிந்துள்ளது.

1952 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது 4 பெண் பிரதி பொலிஸ் மா அதிபர்களும், 9 பெண் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்ளும், 11 பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களும், பொலிஸ் பரிசோதகர்கள் பதவி நிலைகளில் 1,465 பேரும், 8,252 பெண் பொலிஸ் சாஜன்ட் மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பல்வேறு பதவிகளில் தனது கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர். 1979 ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் தற்போது அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கி பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நிறைவேற்றி வருகின்றனர்.

ஆரம்பம் தொட்டு இன்று வரை 36 பொலிஸ் மா அதிபர்களின் தலைமைத்துவத்தின் கீழ், இயங்கி வரும் இலங்கை பொலிஸானது, சட்ட கட்டமைப்பின் ஊடாக பொதுமக்கள் சேவையைத் திறம்படச் செய்து வருகின்றார்கள். 2024இல் இலங்கையில் 607 பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருவதுடன், குற்றங்கள், போதைப்பொருள் மற்றும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த 24 மணி நேரமும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதுடன், அதற்காகத் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் உள்ளடங்களாக 86,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

158வது வருடத்தைக் கௌரவமாகக் கொண்டாடும் இலங்கை பொலிஸானது எல்லாவகைகளிலும் சவால்களைச் சந்தித்து வருவதுடன் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து சிறப்பான சேவைகளை வழங்கியமை மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களினூடாக தெளிவாகின்றது.

கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்காலத்திலும் மக்களினுடைய உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாத்து அமைதியான சமூகத்தினுள் மக்களுடைய தேவைகளுக்காக மக்கள் சேவகனாக இலங்கை பொலிஸ் தன்னை அர்ப்பணிக்கும் என்பதுடன், 158ஆவது நிறைவு ஆண்டை கொண்டாடும் இந்நன்னாளில் இலங்கை பொலிஸானது நீண்ட காலம் சேவையை வழங்கப் பிராத்திப்போம்.





# கட்டியம் சொன்ன கலை அரங்கம்





கனவு மெய்ப்படவேண்டும். அற்புதமான ஒரு கலை அரங்கு. போர்க்கால அனர்த்தங்களின் பின்னராகப் பரிணமிக்கும் கலைகளில் முகிழ்க்கும் இளைய தலைமுறை. தம் அடையாளப் பேணலில் தமது பாரம்பரிய இசை - நடன ஆளுமையில் சிறக்கும் புலம்பெயர்ந்த புதிய தலைமுறை.

இம்முப்பரிமாண இணைப்பில் தோற்றிய ஒரு கனவு, 'கலா ரசனா'.

நம்முடைய கலைப் பொக்கிஷங்களாக நாம் பேணும் இசை, நடனம் இப்போது இந்தியா, இலங்கைக்கு வெளியே, புலம்பெயர் நாடுகளிலும் வளர் கலைகளாகின்றன.

ஐரோப்பிய நாடுகளிலே, ஸ்கன்டினேவிய நாடுகளிலே, கனடாவிலே, அவுஸ்திரேலியாவிலே கர்நாடக இசையிலும் பதர நாட்டியத்திலும் திறன்மிக்க கலைஞர்கள் பலர், இக் கலைகளில் மெச்சத்தக்க ஆற்றலுடன் அரங்கேற்றங்கள் வாயிலும், வேறு மேடை நிகழ்வுகளிலும் பலரை வெளிப்படுத்துவதைப் பரவலாகக் காண்கிறோம்.

அந்நியப்பட்ட வாழ்விலும் ஒரு பிணைப்பாக இழையோடும் இக் கலைகளில் இப் புதிய தலைமுறையினரிடையேயும் ஓர் அந்நியோன்னிய இணைப்பை அவாவி, இக் கலைகள் வழி அவர்களைச் சங்கமிக்க வைத்து, அச் சங்கமத்தில் திளைக்கும் 'சங்கமம்' என்ற நிகழ்வு, 'கலா ரசனா'வின் கனவாகியது; அது நனவில், அழகுடன் அரும்பியிருக்கிறது.

கலாரசனாவின் முதலாவது சங்கமம் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் கடந்த 19ஆம் திகதி ஒரு முத்திரையைப் பதித்திருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு இந்திய அரசு வழங்கிய கலாசார மண்டபத்தின் நவீனத்துவ வசதிகளும், அது நிறைக்கும் ரம்மியமும் இத் தலைமுறைகளின் சங்கம கனவை இக் கலாசார மண்டபத்துடனும் இணைத்தது.

இசையும் நடனமுமாக வருடத்தில் இரு தடவைகள் நல்லூர் உற்சவ காலத்தில் இரு தினங்களும், மார்கழியில் சென்னை இசைவிழாக் காலத்தில் இரு தினங்களுமாகத் திட்டமிடப்பட்டுள்ள சங்கமம் முதல் நிகழ்வு, இலங்கைக் கலைஞர்களுடன் ஒருநாள் நிகழ்வாக நடைபெற்றது.

'ராகசுதா' என்ற வயலின் இசையும், 'நூபுர லாவண்யம்' என்ற நடன நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றன. வயலின் வாத்தியத்தில் ஒலியின் தரத்துக்காக அதன் அமைப்பில் சிறு மாற்றங்களைச் சிலர் செய்வதுண்டு. ஆனால், இவ்வொலித் தரத்துக்காக இரட்டை வயலினும் கண்டுபிடிப்பாகியது. வயலின் வித்துவான் எல்.சுப்பிரமணியத்தின் சகோதரரான எல்.சங்கர் இதனை அறிமுகம் செய்தார்.

'ராகசுதா'வில், தானே தன் கைப்பட உருவாக்கிய இரட்டை வயலினுடன் பத்மநாதன் ஷியாம் கிருஷ்ணா இந்த வயலின் நிகழ்ச்சியை அளித்தார். அந்த வயலினுடன் இதுதான் முதல் கச்சேரி என்று சொன்னார்.

பெஹாக் வர்ணத்துடன் ஆரம்பித்து, சாருகேசியில் ராகம்-தானம்-பல்லவி. நல்லூர் முருகன் பேரில் அவரே தயாரித்திருந்தார். முன்னதாக, சாவித்திரி ராகத்தில் ஒரு கீர்த்தனை. பொதுவில் அரிதானதான இந்த ராகத்தில், எல். சங்கர் வாசித்திருந்த "ஆனந்த நடமாடும் தில்லை..." கீர்த்தனை. பின்னர், ஜனரஞ்சகமாக "சின்னஞ்சிறு கிளியே..." முத்தாய்ப்பாக, தனசிறி தில்லானா. மண்டபம் நிறைந்திருந்த அவை, லயிப்பில் ஆழ்ந்திருந்தது. சுகமும் விறுவிறுப்பும் எம். எஸ். கோபாலகிருஷ்ணன், எல். சுப்பிரமணியம் ஆகியோரை நினைவில் கொணர்ந்தன.

தந்தையார் பத்மநாதன் ஒரு வயலின் வித்துவான். பாட்டு, மிருதங்கம் ஆகியவற்றிலும் தேர்ந்தவரான ஷியாம் கிருஷ்ணா வளமாகும் ஒரு கலைஞர்.

'நூபுர லாவண்யம்' என்றால், சலங்கையின் அழகு என்று பொருள் கொள்ளலாம். நடனத்தின் அம்சங்கள் என்ன? நூபுர லாவண்யத்தில், அவை அத்தனையும் அழகு - கொள்ளை அழகு, முழுமையான - திட்டமான அழகு - நேர்த்தி.

சிறுமிகளும் யுவதிகளுமாக இருபத்துநான்கு பேர் மாறிமாறி, ஒரு சொட்டு தாமதமற்ற, வேகமான அசைவுகளும், நளினமுமான நடன அமைப்புடன் வெளிப்படுத்திய சித்தரிப்பு யுக்திகள் பிரமிப்பூட்டின.

திருப்புகழுடனான நாட்டை அலாரிப்பு, அபிநயமும் சேர, தோற்றுவித்த கம்பீரம், நிகழ்ச்சி முழுமையும் நிலைகொண்டது.

அபிநயத்துக்கு முத்திரையாகும் "பாரோ கிருஷ்ணையா..." யமன் கல்யாணி பதம். ஓர் ஆணும் பெண்ணும் சிவன், சக்தியாக அளித்த "சம்போ சங்கர சிவா..."

பின்னர், 'நான் இராவணன் பேசுகிறேன்' நாட்டிய நாடகம். கதை அமைப்பிலும் நாட்டிய அமைப்பிலும் புதுமைகளைச் சரளமாய் நிறைத்தது. சீதையைக் கவர்ந்துசென்ற, 'நல்லவன்' இராவணனைச் செப்புகிறது. நிகழ்ச்சி முழுமையும் இடையிடையே மிளிர்ந்த நாட்டிய நிலைகள், ஆசிரியையின் படைப்பாற்றலைச் சாற்றியது.

'நர்த்தன ஷேத்திரா' நடனப் பள்ளியின் இயக்குநர் திருமதி பிரியதர்சினி வாகீசனின் மாணவர்கள் இவர்கள். இவருடைய சிரேஷ்ட மாணவி செல்வி ஆதித்தியா ஜெயபாலன் துணையாகவிருந்தார்.

ஒளி அமைப்பு பிரமாதம். நிகழ்ச்சிக்கு மேலும் ஒரு ரசனை சேர்த்தது. ஆக, யாழ் கலாசார மண்டபத்தில் லண்டன் 'கலா ரசனா'வின் இந்த வேனில் கால 'சங்கமம்' நிகழ்ச்சி, ஆவலை நிறைக்கும் கட்டியமாகியிருக்கிறது. மார்கழி 'சங்கமம்', புலம்பெயர்ந்த நாட்டு வித்துவ செழுமையுமாய் கலாரசனை சேர்க்கும்.

மார்கழியில், யாழ்ப்பாணத்தில் இந்நிகழ்ச்சியில் நிகழ்ச்சியாக்கலாம் என கருதும் புலம்பெயர் நாடுகளின் வித்துவ ஆற்றலுடனான இளம் தலைமுறையினர் தொடர்புகொள்ளலாம்.



---

## என் இலக்கை அடைவதற்கு

# எந்த ஆழத்திலும் நீந்த தயார்



ச.தனுஷ்கா,
ஊடகத்துறை.
யாழ்.பல்கலைக்கழகம்.



திருகோணமலையைச் சேர்ந்த பஹ்மி ஹசன் சலாமா, இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலை மன்னாருக்கிடையிலான 45 கிலோ மீற்றர் தூரத்தை உடைய பாக்கு நீரிணையை 12மணி நேரம் இரண்டு நிமிடம் 24 செக்கன்களில் நீந்திச் சாதனை படைத்துள்ளார்.

இச்சாதனைப் பயணம் வெறுமனே நீச்சல் பயணம் மட்டுமல்ல உடற்பயிற்சி உள தைரியம் என இதற்கு மேல் இலட்சக்கணக்கான செலவுகளைக் கடந்து ஹசன் சலாமா இச்சாதனைப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

திருகோணமலை சாஹிரா கல்லூரியில் தரம் பத்தில் கல்வி பயிலும் 15 வயதுடைய மாணவனான ஹசன் சலாமா, கடந்த மூன்று மாதங்களாக இந்த சாதனை முயற்சிக்காகத் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டார். பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையின் எட்டாவது நபராகவும், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த உலகின் முதலாவது முஸ்லிம் நபராவார். இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படையைச் சேர்ந்த கேப்ரல் ரொஷான் அபே சுந்தர வழங்கியுள்ளார்.

பஹ்மி ஹசன் சலாமா விளையாட்டுத் துறைக்கு அப்பால், சமுத்திரத்திற்குக் கீழான சுத்திகரிப்பு பணிகள் மற்றும் கடல் பாதுகாப்பு செயல்முறைகள் தொடர்பாகவும் தனது நேரடி பங்களிப்பை வழங்கியுள்ளார். மிக முக்கியமாக கடல் வாழ் உயிரினங்கள் முருகைக் கற்பாறைகளை பாதுகாத்தல் மற்றும் கடலில் சேரும் பிளாஸ்டிக் பொலித்தீன் கழிவுகள் ஆகியவற்றுக்கு எதிராக விழிப்புணர்வூட்டல்,நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு சுற்றுலாத்துறை கைத்தொழிலின் அபிவிருத்திக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தல் போன்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த பஹ்மி ஹசன் சலாமாவுடனான நேர்காணலைக் கேள்வி பதிலாகத் தருகின்றோம்.

**கேள்வி: நீச்சல் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

சிறு வயதிலிருந்து கடலுக்கும் எனக்குமான உறவு மிக நெருக்கமானது. எங்கு நீரைக் கண்டாலும் ஒரு பிரியம் ஏற்பட்டு உடனே நீந்தச் செல்வேன். தரம் ஐந்து புலமைப்பரீட்சை நிறைவடைந்த பின்னர் என் தந்தை நீச்சல் பயிற்சியில் என்னை இணைத்தார். அதுவும் எனது தனிப்பட்ட பாதுகாப்பு நோக்கத்திற்காக மட்டுமே. இன்று நான்கு வருடங்களாக நீச்சல் துறையில் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். திருகோணமலையில் 'யாணா' நீச்சல் பாடசாலையில் நந்தன விஜயலால் என்ற ஓய்வு பெற்ற கடற்படை இராணுவ அதிகாரியிடம் முதன்முறையாக நீச்சல் கற்றுக்கொண்டேன்.

**கேள்வி: நீச்சல் துறையைத் தெரிவு செய்த போது, உங்கள் குடும்பத்தினரின் நிலைப்பாடு எவ்வாறு இருந்தது?**

ஆரம்பத்தில் என் தாயார் எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், என் தந்தையும் அம்மாவின் தந்தையும் எனது இலட்சியத்தை புரிந்து கொண்டு என்னை ஊக்கப்படுத்தினர். தற்போது என் குடும்பத்தார் என் அனைத்து முயற்சிகளிலும் பக்க பலமாக உள்ளனர்.

**கேள்வி: பாடசாலைக் கல்வி மற்றும் நீச்சல் துறை எவ்வாறு இரண்டையும் முகாமை செய்கிறீர்கள்?**



வார நாட்களில் முதலாம் பாட வேளைக்கு முன்னதாக பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும். இதற்காகப் பாடசாலை அதிபருக்கு கடிதம் மூலம் அனுமதி பெற்றுள்ளேன். காலை 7 மணி வரையிலான நேரப்பகுதியில் எனது நீச்சல் பயிற்சியை மேற்கொள்வேன். அடுத்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்ள இருப்பதனால் தற்பொழுது அதிகமான நேரத்தைக் கல்விக்காக ஒதுக்கியுள்ளேன்.

**கேள்வி: நீச்சல் துறையைத் தவிர்த்து நீங்கள் சாதிக்க விரும்பும் துறை என்ன?**

கால்பந்து துறையில் அதிக ஆர்வமுள்ளது. வலைய மட்டத்திலான போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளேன்.

**கேள்வி: உங்கள் முன்மாதிரி யார் என்று கூறுவீர்களா?**

எனது முன்மாதிரிவர் மட்டக்களப்பைச் சேர்ந்த தேவேந்திரன் மதுசிகன் ஆவார். மதுசிகன் அவர்கள் பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை புரிந்தார். அவரைப் பார்த்து நானும் சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது.





**கேள்வி: உங்கள் அடுத்த சாதனை என்ன?**

ஆங்கில சுரங்கப் பாதையை நீந்திக் கடக்க வேண்டும் என்பது எனது அடுத்த இலக்கு. இதற்கான பயிற்சிகளை அடுத்த ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவு செய்த பின்னர் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளேன்.

**கேள்வி: உங்கள் இலட்சியத்தை அடைந்து கொள்வதில் பெற்றோரின் வகிபங்கு எவ்வாறுள்ளது?**

பிற பெற்றோர்கள் போல், தமது ஆசைகளைப் பிள்ளைகள் மீது திணிக்காது எனது விருப்பம், இலட்சியத்தை அடைந்து கொள்ளச் சகல வழிகாட்டல்களையும் எனது பெற்றோர் வழங்குகின்றனர். பொருளாதார ரீதியாக நீச்சல் பயிற்சிக்கு அதிக செலவுகள் ஏற்படும். உணவு, உடல் ஆரோக்கியம், மன தைரியம் என என் பெற்றோர் எனக்கு அனைத்து விதத்திலும் பக்க பலமாக உள்ளனர். எனது உயர் கல்வியை சமுத்திரவியல் துறையில் தொடர விரும்புகின்றேன். அதற்கான படிநிலைகள், சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எவ்வாறு இருந்தால் சமுத்திரவியல் துறையை நாடலாம் என அனைத்து வழிகாட்டல்களையும் என் பெற்றோர் எனக்கு வழங்குகின்றனர். நான் பாக்கு நீரிணையைக் கடப்பதற்கு முக்கியமான காரணி என் பெற்றோரும் அவர்களது ஊக்குவிப்பும் ஆசீர்வாதமும் ஆகும்.

**கேள்வி: பாக்கு நீரிணையை கடக்க வேண்டும் என்ற சாதனை முயற்சியில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

எதிர்மறையான கருத்துக்களால் மனதளவில் சோர்வடைந்தேன். என் குடும்பத்தாரின் உதவியால் அதிலிருந்து மீண்டு வந்தேன். நீச்சல் பயிற்சியைச் சமுத்திரத்தில் மேற்கொள்ளும்போது, பலமுறை சுறாக்களைச் சந்தித்துள்ளேன். அத்துடன், விஷ ஜெல்லி மீன்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளேன். சமுத்திரத்தின் மாசு மற்றும் கழிவு நீரால் சரும ஒவ்வாமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டன. அதிகப்படியான பயிற்சியால் தசைப் பிடிப்பு பிரச்சினை ஏற்பட்டது. மிக முக்கியமான பிரச்சினையாகப் பொருளாதார செலவுகளை ஈடு செய்வது காணப்பட்டது.

பாக்கு நீரிணையைக் கடக்கும் மூன்று மாத கால பயிற்சிக்காக சுமார் 3.5 தொடக்கம் 4 மில்லியனுக்கு மேலாகச் செலவுகள் ஏற்பட்டன. என் பெற்றோர் காணியை அடகு வைத்து அதற்கான நிதியை மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றனர். பாக்கு நீரிணையைக் கடப்பதற்கான அனுமதி முதலில் நிராகரிக்கப்பட்டது. சாதனையை மேற்கொள்ள வேண்டிய அன்று காலநிலை எனக்கு சாதகமாக இருக்கவில்லை. கடுமையான காற்றோட்டத்தால் நேரடியான பாதையில் நீச்சல் செய்யாது காற்றோட்டமற்ற சுற்றுப் பாதையில் சமுத்திரத்தில் நீந்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

(புதன்கிழமை தொடரும்...)



மணிப்பூர்

மணிப்பூரில் மீண்டும்

# வன்முறை வெடித்தது



மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் வெடித்த வன்முறையில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

மணிப்பூரில் பெரும்பான்மையாக இருக்கும் மெய்தி இன மக்கள், கடந்த வருடம் (2023) தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து கோரி, போராட்டங்களில் குதித்தனர். இதை எதிர்த்து குக்கி பழங்குடியினர் பேரணி நடத்தியதில் கலவரம் வெடித்தது.

கடந்த ஆண்டு மே மாதம் தொடங்கிய இந்த வன்முறையில் கலவரங்களும் தீவைப்புச் சம்பவங்களும் அரங்கேறின. சில நாட்கள் மணிப்பூர் முழுவதும் பற்றி எரிந்தது.

இதுபோக, பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு வீதிகளில் அழைத்துச் செல்லப்பட்ட காணொளி, உலகையே பதறவைத்தது. மணிப்பூரில் நடைபெற்ற வன்முறையில் இதுவரை 200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இந்த வன்முறை, ஓராண்டைக் கடந்தும், இன்றளவும் முடிவுக்கு வரவில்லை.

முன்னதாக, கடந்த மாத தொடக்கத்தில் அம்மாநில முதல்வர் பைரேன் சிங், இன்னும் 6 மாதங்களில் முழுமையாக அமைதி திரும்பும் என உறுதியளித்திருந்தார்.

இந்த நிலையில், மீண்டும் மணிப்பூரில் சனிக்கிழமை (31) வன்முறை வெடித்துள்ளது. மணிப்பூரின் மேற்கு இம்பால் நகரில் கவுடிரக் பகுதியில் குக்கி இனத்தவர்களில் சிலர், உயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஆளில்லா விமானங்களின் உதவியுடன் எறிகுண்டுகளை வீசினர். துப்பாக்கிச்சூடும் நடத்தினர்.

இந்த எதிர்பாராத தாக்குதலில் சிக்கி பெண் ஒருவர் உள்பட 2 பேர் பலியானார்கள். இந்த வன்முறை சம்பவத்தில் கிராமத்தில் இருந்த வீடுகள், வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளன. இதையடுத்து அப்பகுதியில் மத்திய மற்றும் மாநில அரசு படைகள் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம்

ராதிகாவிடம்

# சிறப்பு புலனாய்வு குழு விசாரணை



கேரளாவில் கெரவன்களில் ரகசிய கெமரா வைத்ததாக நடிகை ராதிகா பேசியிருந்த நிலையில், அவரிடம் கேரளா சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் தொலைபேசி வாயிலாக விசாரணை நடத்தியுள்ளனர்.

கேரள திரையுலகமே ஹேமா கமிட்டி அறிக்கையால் அரண்டு போயிருக்கிறது. பிரபல நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் என பெரும்பாலானவர்கள் மீது அடுக்கடுக்கான பாலியல் புகார்களை பெண் கலைஞர்கள் சுமத்தியுள்ளனர்.

இந்த சூழலில், சில தினங்களுக்கு முன்பு, “கேரளாவில் படப்பிடிப்பின் போது, வழங்கப்பட்டுள்ள கெரவனில் ரகசியமாக கெமராக்களை பொருத்தி நடிகைகளின் அந்தரங்க வீடியோக்களை பதிவு செய்கின்றனர்” என்று நடிகை ராதிகா கூறியிருந்தார்.

மேலும், “அந்த வீடியோக்களை அங்கே படப்பிடிப்பில் இருக்கும் நடிகர்கள் ஒன்றாக அமர்ந்து தங்களது செல்போனில் பார்த்து இரசித்துள்ளனர். இதுபோன்ற சம்பவங்களை பலமுறை நானே நேரில் கண்டுள்ளேன்” என அவர் கூறிய தகவல் இணையதளத்தில் வைரலானது.

இந்நிலையில், கேரளா அரசால் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் நடிகை ராதிகாவிடம் தொலைபேசி வாயிலாக விசாரணை நடத்தினர். அப்போது, எப்பொழுது, எந்த நடிகைக்கு நடந்தது என சிறப்பு புலனாய்வுக் குழு அதிகாரிகள் ராதிகாவிடம் கேட்டறிந்தனர்.



இலங்கைக்கு எதிரான

# தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து

இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்து வென்றிருந்த நிலையில், லோட்ஸில் வியாழக்கிழமை (29) ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை (01) முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்டை வென்ற நிலையிலேயே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இங்கிலாந்து: 427/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 143, குஸ் அட்கின்ஸன் 118, பென் டக்கெட் 40, ஹரி ப்ரூக் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 5/102, மிலான் ரத்னாயக்க 2/89, லஹிரு குமார 2/101, பிரபாத் ஜெயசூரிய 1/96)

இலங்கை: 196/10 (துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் 74 ஓட்டங்கள். பந்துவீச்சு: மத்தியூ பொட்ஸ் 2/19, கிறிஸ் வோக்ஸ் 2/21, குஸ் அட்கின்ஸன் 2/40, ஒலி ஸ்டோன் 2/70, ஷொய்ப் பஷிர் 1/21)

இங்கிலாந்து: 251/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 103, ஹரி ப்ரூக் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 3/52, லஹிரு குமார 3/53, மிலான் ரத்னாயக்க 2/36, பிரபாத் ஜெயசூரிய 2/105)

இலங்கை: 292/10 (வெ.இ: 483 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 58, திமுத் கருணாரத்ன 55, தனஞ்சய டி சில்வா 50, மிலான் ரத்னாயக்க 43, அஞ்சலோ மத்தியூஸ் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: குஸ் அட்கின்ஸன் 5/62, கிறிஸ் வோக்ஸ் 2/46, ஒலி ஸ்டோன் 2/56, ஷொய்ப் பஷிர் 1/78)

போட்டியின் நாயகன்: குஸ் அட்கின்ஸன்



கிழக்கு மாகாண 18 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடர்:

# மருதமுனை அல்-மதீனா சம்பியன்

ஏ.எல்.எம்.ஷினாஸ்

கிழக்கு மாகாணத்தில் 18 வயதுக்குட்பட்ட மாகாண மட்ட கால்பந்தாட்டத் தொடரில் மருதமுனை அல்- மதீனா வித்யாலயம் சம்பியனானது.

கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை(28) நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிண்ணியா வலயத்துக்கு உட்பட்ட அல் - அமீன் வித்தியாலயத்தை வென்றே கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அல்- மதீனா வித்தியாலயம் சம்பியனானது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில், 4-2 என்ற ரீதியில் பெனால்டியில் வென்றே மதீனா சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியது. \ இதனையடுத்து பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களை பிரதான வீதியில் இருந்து பாடசாலை வரைக்கும் கல்வி சமூகம், நலன் விரும்பிகளினால் மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள்.



# மாணவர்களுக்கான விளையாட்டு சீருடை

அஸ்ஹர் இப்றாஹிம்

இவ்வருடம் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தில் இருந்து கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவ, மாணவிகளுக்கான விளையாட்டு சீருடை பாடசாலையின் நலன்விரும்பி ஒருவரினால் அன்பளிப்பு செய்யப்பட்டது.



நமீபியா

வறட்சியால் வன விலங்குகளை


# வேட்டையாடும் நமீபியா

கடும் வறட்சி காரணமாக மக்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், யானை, வரிக்குதிரை, நீர்யானை, எருமை என 100க்கும் மேற்பட்ட விலங்குகளை கொன்று மக்களுக்கு உணவாக வழங்கிட தென்னாபிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியா முடிவு செய்துள்ளது.

வனவிலங்குகளை வேட்டையாடும் போது, இடம்பெறும் மோதலால் மனித உயிர்ப்பலிகளும் ஏற்படக்கூடும் என வனத்துறை அச்சம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஏராளமான வன விலங்குகளை இறைச்சிக்காக கொல்ல நமீபியா அரசு முடிவு செய்துள்ளது.

பிரபல ரொய்ட்டர்ஸ் செய்தி அறிக்கையில், “நாட்டின் சுற்றுச்சூழல் அமைச்சகம் 83 யானைகள், 300 வரிக்குதிரைகள் மற்றும் 30 நீர்யானைகள் உட்பட மொத்தம் 723 வன விலங்குகளை அழிக்க முடிவு செய்துள்ளது. வரவிருக்கும் மாதங்களில் நமீபியா அதன் மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதி பேருக்கு அதிக உணவுப் பாதுகாப்பின்மை ஏற்படும் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கராச்சி

திறந்த சில மணி நேரத்தில்

# சூறையாடப்பட்டது

பாகிஸ்தானில் கராச்சி பகுதியில் புதிதாக திறக்கப்பட்ட வணிக வளாகம் ஒன்று, திறந்த சில மணி நேரங்களிலிலேயே அங்கு கூடியிருந்த பெருந்திரளான பொதுமக்களால் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வணிக வளாகம் தொடர்பில், பெருமளவில் விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. விளம்பரத்தைப் பார்த்ததும் அதிக தள்ளுபடியைப் பெற ஏராளமான பொதுமக்கள் கடைக்கு விரைந்தனர்.

இந்நிலையில், மக்களை கட்டுப்படுத்த முடியாமல் போனதால், அதன் நிர்வாகிகள் கதவை அடைக்க முயன்றனர். ஆனால், கோபமடைந்த மக்கள் கண்ணாடி கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்து, பொருட்களை அள்ளிக்கொண்டு சென்றனர்.

பாகிஸ்தானில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாகத்தான் விலை குறைவான பொருட்கள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனாலும் மக்கள் கொள்ளையடித்து சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# யுனைட்டெட்டை வீழ்த்திய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக லூயிஸ் டியஸ் இரண்டு கோல்களையும், மொஹமட் சாலா ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் நியூகாசில் யுனைட்டெட் வென்றதுடன், செல்சியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும் கிறிஸ்டல் பலஸுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

# இத்தாலிய குரான் பிறீ: வென்றார் லெக்கலெர்க்



இத்தாலிய குரான் பிறீயானது ஞாயிற்றுக்கிழமை(01) நடைபெற்றபோது பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் வென்றார்.

பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த மொனாக்கோவின் லெக்கலெர்க் வென்ற நிலையில், பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்லரென் அணியின் ஒஸ்கார் பியாஸ்ட்ரி இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த பியாஸ்திரியின் சக மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் மூன்றாமிடத்தைப் பெற்றார். அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 303 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியனான றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் காணப்படுகின்றார். 241 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் பிரித்தானியாவின் நொரிஸும், 217 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லெக்கலெர்க்கும் காணப்படுகின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 03 செப்டெம்பர் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.